*This book dedicated to...*



**Sis. THEOLA** (Late)



**J.C.** (Late) **& BETTY CHOATE**

*The Missionary Family, whose life is Evangelism...*

சுவிஷேசப் பணியை தங்கள் வாழ்வின் மூச்சாக வாழும் குடும்பத்திற்கு இப்புத்தகம் அற்பணம்...



# பதிப்பாசிரியரிடமிருந்து....

அன்பு வாசக நண்பரே !

ஆண்டவரின் நாமத்தில் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

“வரலாற்றில் கிறிஸ்துவைப் பற்றிய ஆதாரங்கள்” எனும் இப்புத்தகம் ஒரு ‘பொக்கிஷம்’. ஏனென்றால், கிறிஸ்துவை நம்பும்படி இப்புத்தகம் நம்பிக்கையின் விதையாகவும், ஆதாரமாகவும் இருக்கின்றது; ஏற்கனவே கிறிஸ்துவின் மீது நம்பிக்கை உடையவர்கட்கு தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்த இப்புத்தகம் உதவுகிறது. திறந்த மனதுடனும், நேர்மையான இதயத்துடனும் இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. கிறிஸ்துவையும், அவருடைய வாழ்வையும், அவரின் மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஆகியவற்றையும் கண்ணாரக் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்களும், கிறிஸ்துவின் சமகாலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற வரலாற்றாலர்களின் சாட்சியங்களும் இப்புத்தகத்தை விலையேறப் பெற்றதாக்குகிறது. இப்புத்தகத்தின் சாட்சியங்களையும், ஆதாரங்களையும் நீங்களே ஆராய்ந்து பாருங்கள். முடிவையும் நீங்களே தீர்மானம் செய்யுங்கள் !

அன்புடன்,
உங்கள் சகோதரன்,

**P.C. பிலேமோன் ராஜா** M.Th.,
(இயக்குநர் - J.C. சுவிஷேசப் பணி பயிற்சியகம்,
ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

# வரலாற்றில் கிறிஸ்துவைப் பற்றிய ஆதாரங்கள்

## EVIDENCE OF CHRIST IN HISTORY



ஆசிரியர் : **Richard. N. Ady** *(ரிச்சர்ட். N. ஆடி)*

**World Literature Publication**

**Madurai (India)**

## Evidence of Christ in History (Tamil)

Copyright 2012 - Kirubaiyulla Varthai ®

| | | |
|---|---|---|
| First Printing | : | October 2012 |
| Copies | : | 2000 |
| Thanks to | : | **BETTY CHOATE** (World Evangelism) |
| Translation, Layout & Proof Reading | : | Kingsly Rajah & Antony Rajah |
| Publisher | : | **P.C. Philemon Rajah** M.Th., (Director - J.C. School of Evangelism) |
| Printed at | : | Thee Classic Printers<br>Madurai - 625 001<br>Phone : 0452 - 2323819 |
| For Copies | : | **J.C. School of Evangelism**<br>45 C/1, Church Lane, Coronation Street<br>Arasaradi, Madurai - 625 016<br>Phone : 0452 - 26 070 26<br>Cell : 92 4421 4421, 92 4431 4431<br>Visit us : www.graciousword.org<br>Email : obey2jesus@gmail.com |

## புத்தகத்தின் உள்ளே...


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | யூத மற்றும் ரோம வரலாற்றாலர்கள் | 5 |
| 2 | ஆதி கிறிஸ்தவ பதிவேடுகள் | 11 |
| 3 | தொல்பொருள் ஆராய்ச்சியிலிருந்து சாட்சியங்கள் | 17 |
| 4 | பதிவேட்டுச் சான்றுகள் | 24 |
| 5 | கண்ணாரக் கண்ட சாட்சி | 31 |
| 6 | தீர்க்கதரிசனத்திலிருந்து சாட்சியம் | 37 |
| 7 | யார் இந்த இயேசு? | 43 |
| 8 | கிறிஸ்து மரித்து மறுபடியும் உயிரோடு எழுந்தாரா? | 52 |
| 9 | உங்கள் தீர்ப்பு என்ன? | 58 |

# அறிமுகம்

'சர்வசஞ்சாரத்தில் தேவனைப் பற்றிய ஆதாரங்கள்' என்ற நம்முடைய முதல் புத்தகத்தில், சர்வ சஞ்சாரத்தின் (universe) அறிவுசார்ந்த வடிவமைப்புகளான அனுவின் சிறிய உறுப்புமுதல் வெளிவட்டத்தில் பெரிய கேலக்ஸி வரை உள்ளவைகளைப் பற்றிய ஆதாரங்களை கண்டுபிடித்த தற்காலிக விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளைப் பற்றி ஆராய்ந்தோம்.

அறிவுசார்ந்த வடிவமைப்புகளின் (Intelligent design) ஆதாரம், விஞ்ஞானத்தின் அநேக பிரிவுகளான - வானசாஸ்திரம், நுண்ணுயிரியல், உயிரியல், உயிர்வேதியல், தாவரவியல், புவியியல், இயற்பியல், விலங்கியல் ஆகியவற்றில் காணப்படுகின்றன. சில உயிரினங்கள் வித்தியாசமானவை. அதாவது, அவைகள் நிறைய பகுதிகளால் உருவாக்கப்பட்டுள்ளன; மேலும் அவை வாழ்வை தக்கவைத்துக்கொள்ள அந்த அனைத்து பாகங்களும் ஒன்றிணைந்து வேலை செய்ய வேண்டும். உதாரணமாக, நுண்மங்களின் (Bacterium) வால் பகுதியை சுற்ற வைக்கும் சிறிய மோட்டார்; அதுவே இந்த நுண்மங்களை திரவங்களுக்கு ஊடே செல்ல வைக்கின்றது; அந்த மோட்டார் 20 வித்தியாசமான புரதங்களினால் ஆனது; மேலும் அதுவே அந்த வாலை சுற்ற வைக்கிறது. இந்த பாகங்கள் எல்லாம் இயற்கையாக ஒரு நெடுங்காலத்தில் தானாக உருவாகியிருக்க முடியாது. இப்படிப்பட்ட கடினமான உருவாக்கம், அறிவுசார்ந்த வடிவமைப்பின் அறிகுறியே.

ஒவ்வொரு வடிவமைப்பும் ஒரு வடிவமைப்பாளரை அடையாளப்படுத்துகிறது. அதின் விளைவாக, அநேக விஞ்ஞானிகள் இன்று நம்புவது என்னவெனில், 'வல்லமையும், அறிவில் தேர்ந்த படைப்பாளியாகிய தேவனை நம்புவது நியாயமானதே'!

'வரலாற்றில் கிறிஸ்துவைப் பற்றிய ஆதாரங்கள்' எனும் இப்புத்தகத்தில், நாம் இன்னொரு அடி முன் வைக்கிறோம். அண்டசராசரமும் தேவனால் படைக்கப்பட்டது என எண்ணி, அவர் விரும்புகிற எதையும் செய்ய அவருக்கு வல்லமை உண்டு என முடிவு செய்வது நியாயமானது. இயற்கை விதிகளை உருவாக்கிய தேவனுக்கு, அவைகளை ரத்து செய்யவோ, மேம்படுத்தவோ முடியும்; ஏனென்றால், அவருடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என அவர் விரும்புகிறார்.

படைத்த தேவனை நம்பும் விஞ்ஞானிகளுக்கு, பொதுவாக அற்புதங்களை நம்புவதில் பிரச்சனை இல்லை. அநேக சந்தேகிப்பாளர்கள் மூடிய மனதுடன் பைபிளிடம் வருகின்றனர். அற்புதங்கள் சாத்தியமில்லை என்ற தீர்மானத்துடன், மனித வரலாற்றில் தேவனுடைய செயல்பாடுகளைப் பற்றி வேதாகமம் சொல்லும் காரியங்களுக்கான ஆதாரங்களை அவர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

நீங்களே நீதிபதி. இயேசு கிறிஸ்து எனும் மனிதன் மூலமாக தேவன் மனுகுலத்திற்கு தம்மையே வெளிப்படுத்தியுள்ளார் என்பதற்கான ஆதாரங்களை நீங்கள் பார்க்க உள்ளீர்கள். இந்த ஆதாரங்களை ஆராய்ந்து பார்த்தப்பின், தீர்ப்பை நீங்களே முடிவு செய்யலாம்.

இந்த விசாரனையை (ஆராய்ச்சியை) துவங்க இருக்கும் உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக.

# 1 யூத மற்றும் ரோம வரலாற்றாலர்கள்

## Jewish and Roman Historians

சில எதிர்ப்பாளர்களின் கூற்று என்னவெனில், இயேசு கிறிஸ்து எப்பொழுதாவது வாழ்ந்ததற்கும், பெரிய அதிசயங்களை செய்ததற்கும், ரோமச் சிலுவையில் மரித்ததற்கும் அல்லது மரித்தவர்களில் இருந்து உயிருடன் எழும்பியதற்கும், நிச்சயமான ஆதாரங்கள் ஏதும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியில் இல்லை என்பதே!

இது உண்மையா? வேதாகமத்திற்கு வெளியில் இயேசுவைப் பற்றி ஏதேனும் ஆதாரங்கள் உண்டா? இனி வரப்போகும் பாடங்களை படித்து, நீங்களே நீதிபதியாய் இருந்து முடிவு செய்யுங்கள்.

ரோம அரசாங்கத்தின் முக்கியத்துவம் இல்லாத, ஒதுங்கிய ஒரு பகுதியில் இயேசுவின் ஊழியம் சம்பந்தப்பட்டதாகையால், உலக வரலாற்றில் அவரைப்பற்றி இவ்வளவு விபரங்கள் இருக்கிறது என்பது ஆச்சர்யமான ஒன்று. இந்தப்பாடத்தில், மிகப்பெரிய ரோம மற்றும் யூத பதிவேடுகளில் சிலவற்றை நாம் ஆராய்வோம்.

**ஜோசேபஸ் (Josephus) :-**



ஃலெவியஸ் ஜோசேபஸ் என்பவர்தான் இயேசு கிறிஸ்துவைப்பற்றி குறிப்பிட்ட மிக பழமையான கிறிஸ்தவரல்லாத எழுத்தாளர். யூத-ரோம போரின் போது, கலிலேயாவில் இருந்த ரோமர்களுக்கு எதிராக புரட்சிப்படையை வழிநடத்திய ஒரு யூதன், ஜோசேபஸ் (கி.பி 66-74). ரோம ஜெனரலான வெஸ்பாசியன், ஜோடபாடா (Jotapatta) என்ற பட்டணத்தை பிடித்தபோது, ஜோசேபஸ் தானாக கைதாகி தன்னுடைய மீதி காலத்தை ரோமர்களை சேவிப்பதில் கழித்தார்.

கி.பி 37ல் ஜோசேபஸ் பிறந்து, ரோமபுரியில் கி.பி. 94ல் மரித்தார். ஆகையால் அவர், அப்போஸ்தலரின் சமகாலத்தவர் ஆவார். முதல் நூற்றாண்டில் பிற்பகுதியில் அவர், இரண்டு மிகப்பெரிய வரலாற்று படைப்புகளை எழுதினார்; அவை “யூதப் போர்கள்” (The Jewish wars) மற்றும் “யூதரின் தொன்மையான நடைமுறைகள்” (Jewish Antiquities).

இந்த “யூதரின் தொன்மையான நடைமுறைகள்”ன் புத்தகம் 20, பாடம் 9ல், இந்த ஜோசேபஸ் இயேசுவைப் பற்றியும் அவரது சகோதரர் யாக்கோபைப்

பற்றியும் குறிப்பிடும் போது, "ஃபெஸ்டஸ் (Festus) இப்பொழுது மரித்துப்போனான்; மேலும் அல்பினஸ் (Albinus) இருந்தாலும் வீதியில் இருக்கிறான்; அதினால் அவன் (அனனஸ்) நீதிபதிகளின் சங்கமாகிய சானஹெட்ரினை (Sanhedrin) கூட்டி, அதின் முன்பாக கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட இயேசுவின் சகோதரனான யாக்கோபையும் வேறு சிலரையும் கொண்டுவரச்செய்து; அவர்களுக்கு எதிராக, சட்டத்தை உடைத்தவர்கள் என்ற குற்றச்சாட்டுகளை உருவாக்கி, அவர்களை கல்லெறியும்படி ஒப்புவித்தான்".

அனனஸ் என்ற யூத பிரதான ஆசாரியன் தைரியமும், துடுக்குமான மனிதன். ரோம ஆளுனரான ஃபெஸ்டஸ் மரித்தபின் யூதேயாவுக்கு புதிய ஆளுனர் வந்த நிலையில், இந்த அனனஸ் ஆளுனர் தன் அதிகாரத்தை பயன்படுத்தி இயேசுவின் சகோதரனான யாக்கோபு போன்ற கிறிஸ்தவ தலைவர்களை விடுவிப்பதை தடுத்து நிறுத்தினான்.

ஜோசேபஸின் இந்த வரலாற்றுக் குறிப்பை இதுவரை எந்த விமர்சகரும் மறுத்து வெற்றிபெறவில்லை. இந்த ஜோசேபஸின் குறிப்பு, இயேசுவை "கிறிஸ்து" என்றும் "மேசியா" என்றும், அதாவது "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற உண்மையை உறுதி செய்கின்றது.

ஜோசேபஸ் தன்னுடைய "யூதரின் தொன்மையான நடைமுறைகள்" (Jewish Antiquities) புத்தகத்திலும் 18:63-64ல், இயேசுவைப் பற்றி எழுதியுள்ளார். "இப்பொழுதும் இந்த காலத்தில் இயேசு என்னும் ஒரு ஞானமுள்ள மனிதன் இருந்தார்; அவர் அற்புதங்களை செய்பவராகவும், **உண்மையை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளும் ஜனங்களின் போதகராகவும் அவர் இருந்தபடியால், அவரை மனிதன் என அழைப்பது நியாயம்தானா என தெரியவில்லை;** யூதரிலும் புறஜாதியாரிலும் அநேகரை அவர் தமது பக்கமாக சேர்த்துக் கொண்டார். **அவரே கிறிஸ்து !** நமக்குள் இருந்த பிரதான மனிதரின் ஆலோசனைப்படி பிலாத்து அவரை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்த போது, அவரை முதலாவது நேசித்தவர்கள் அவரை மறுதலிக்கவில்லை; ஏனெனில், **தெய்வீக தீர்க்கதரிசிகள் இதைப்பற்றியும் அவரைப்பற்றிய பத்தாயிரத்திற்கு அதிகமான அற்புதமான காரியங்களை முன்னறிவித்தபடியே அவர் மூன்றாம் நாளில் அவர்களுக்கு முன் உயிரோடு எழுந்தார்;** மேலும் அவருடைய பெயரினாலே வந்த கிறிஸ்தவர் என்ற ஜாதியும் இந்நாள் வரையும் அழிந்துபோகவில்லை".

இயேசுவைக் கண்ணாரக் கண்ட சாட்சிகள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே எழுதிய ஒரு கிறிஸ்தவரல்லாத வரலாற்றாலரின் சக்திவாய்ந்த கூற்று இது. இந்த வாக்கியங்கள் முழுவதுமே உலகம் எல்லாம் உள்ளவர்களால் அதிகாரப்பூர்வமானது என கருதப்படுகின்றது. ஆயினும் சில அறிஞர்கள் நினைப்பது என்னவெனில், மேலே நாங்கள் வித்தியாசப்படுத்தி காண்பித்துள்ள வரிகள் பின்னாளிலே பிரதியெடுத்தவர்களால் சேர்க்கப்பட்டது என்பதே.

சரி, வித்தியாசப்படுத்தப்பட்ட அந்த கேள்விக்குரிய பாகங்களை தவிர்த்தாலும் கூட, இயேசு ஒரு ஞானமுள்ள மனிதன் என்றும், அற்புதங்களை

செய்தவர் என்றும், அநேகரை தம்மிடம் ஈர்த்தார் என்றும் ஆதாரங்கள் நமக்குண்டே! யூத மதத்தலைவர்களின் தூண்டுதலின்பேரில், இயேசுவானவர் குற்றம்சாட்டப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார்; ஆனாலும், அவரை நேசித்தவர்கள் அவரை மறுதலிக்கவில்லை. "கிறிஸ்தவ இனம் அல்லது ஜாதி", ஜோசேபஸ் இந்த வார்த்தைகளை கி.பி 90களில் இவைகளை எழுதியபோது அழிந்துவிடவில்லை.

## யூதர்களின் சட்டத்தொகுதி : (The Jewish Talmud)

பாபிலோனிய சட்டத்தொகுதியானது 63 புத்தகங்களுடன் ஒழுக்கம், வரலாறு, சட்டம், சடங்குகள் மற்றும் தெய்வீகக் காரியங்களைப் பற்றிய அறிவுரைகளை உள்ளடக்கியதாக இருந்தன. அவை பல நூற்றாண்டுக் கால இடைவெளியில் எழுதப்பட்டும், முறைப்படுத்தப்பட்டும் உள்ளது; ஆனால், இயேசுவைக் குறிக்கும் பகுதியானது கி.பி 70 முதல் 200க்குள் எழுதப்பட்டது. "சான்ஹறட்ரின் 43a" என்றதின் ஒரு பகுதியானது இவ்வாறு கூறுகிறது:

"பஸ்காவின் சமயத்தில், அவர்கள் இயேசுவை (Yeshu) தொங்கவிட்டனர் (ஒரு பிரதி நாசரேத்தின் இயேசு) என்று கூறுகிறது. மேலும், ஒரு அறிவிப்பாளர் அவருக்கு முன் நாற்பது நாளும் இவ்வாறு கூறிச் சென்றார்; இவர் கல்லெறியப்படப் போகிறார், ஏனெனில், 'இவர் பில்லிசூனியம் செய்து இஸ்ரவேலரை தூண்டி தவறான வழியில் நடத்தினார். இவருக்கு சாதகமாக யாராவது எதையேனும் கூற விரும்பினால், அவர் வந்து இவருக்காக வாதிடலாம்.' ஆனால், அவருக்கு சாதகமாக எதுவும் இல்லாததினால், பஸ்காவின் நேரத்தில் அவரை தொங்கவிட்டனர்".

இது ஒரு எதிர்ப்பு உணவர்வுள்ள கூட்டத்தாரால் கொடுக்கப்பட்ட ஆதாரம் தரும் சாட்சியாகும். எதிர்பாளிகளான யூத தலைவர்கள் இயேசு, பஸ்கா நேரத்தில் தொங்கவிடப்பட்டார் (சிலுவையில் அறையப்படுதலுக்கான யூத விளக்கம் அப் 5:30; 10:39) என உறுதி செய்தனர்; மேலும் அவர் அற்புதங்களை செய்தார் (அதை அவர்கள் பில்லிசூனியம் என்றார்) ; மேலும், சில யூத போதனைகளில் இருந்து அநேகரை வழிவிலகச் செய்தார். யூதத் தலைவர்கள் அவரை கல்லெறிந்து கொல்ல திட்டமிட்டனர்; ஆனாலும், அதற்கு பதில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். இந்தப் பகுதியில் உள்ள எல்லா முக்கிய குறிப்புகளும் சுவிஷேச புத்தகங்களில் உள்ளவைகளோடு முற்றிலும் ஒத்துப்போகிறது.

## இளையவரான ப்ளைனி (Pliny the Younger)

இரண்டாம் நூற்றாண்டின் முந்தையப் பகுதியில் இளையவரான ப்ளைனி, பித்தினியாவின் ஆளுனராக (தற்போது வடமேற்கு துருக்கி) இருந்தார். அங்கே அவர் தன்னைத்தானே ஒரு குழப்பத்துடன் கண்டார். அவருக்கு முன்பாக கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவர்கள் ஆபத்தற்றவர்களாக இருந்ததைக் கண்டார்; ஆனாலும், அவர்கள் பிடிவாதமாக ரோம பேரரசை வணங்க மறுத்தனர்; மேலும்,

அவர்கள் சிலைவழிபாட்டை பகிரங்கமாக எதிர்த்ததினால் சிலை வியாபாரத்தை பாதித்தனர். இச்சூழலில் ப்ளைனி, கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்த சில கிறிஸ்தவர்களை கொன்றுவிட தீர்மானித்தான். தான் செய்யப்போவது சரிதானா என உறுதியற்ற நிலையில், ப்ளைனி தன் நண்பனாகிய ட்ராஜான் பேரரசனுக்கு கடிதம் எழுதி அவன் யோசனையை கோரினான். இந்தக் கடிதம் கி.பி. 112ஐ சார்ந்தது.



ப்ளைனி (Pliny) எழுதியது என்னவென்றால், ''நான் ஒருபோதும் கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் செயலில் ஈடுபட்டதில்லை. ஆகையால், இந்த வகையினரை தண்டிப்பதோ, விசாரிப்பதோ எந்த அளவிற்கு சரி என தெரியவில்லை.

இச்சமயத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்பவர்களிடம் நான் பின்வரும் செயல்பாட்டினைக் கண்டேன்: மேலும், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதில் உறுதியுடன் உள்ளனரா என நான் விசாரித்தேன்; அப்படியே அறிக்கை செய்தவர்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் முறையும் விசாரித்தேன்; மேலும், அவர்கள் கிறிஸ்தவராயிருப்பின் தண்டிக்கப்படுவர் என்றும் மிரட்டினேன்; தொடர்ந்து நிலைநின்றவர்களை தண்டித்தேன். அவர்களுடைய கொள்கை, பிடிவாதம் மற்றும் வளைந்து கொடுக்காத தன்மை எப்படியாயிருப்பினும், எனக்கு சந்தேகமேயில்லை அவர்கள் தண்டனைக்குரியவர்கள்.

இப்படிப்பட்ட நம்பிக்கை உடைய பிற வகுப்பினரும் இருந்தனர்; ஆனால், அவர்கள் ரோம பிரஜைகளாகையால், அவர்களை ரோமாபுரிக்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டேன்.

அவர்கள் (கிறிஸ்தவர்கள்) உறுதியாக இருந்தனர்; எனினும், அவர்களுடைய குற்றம் என்னவெனில், ஒரு குறிப்பிட்ட நாளில் விடிவதற்குமுன் ஒன்றுகூடி, கிறிஸ்துவே கடவுள் என்று பாடல்களை பாடி இருப்பதே; மேலும், தவறு செய்யக்கூடாது, திருடக்கூடாது, விபச்சாரம் கூடாது என்பதைப் போன்ற உறுதிமொழிகளினால் ஒன்றரக்கட்டினது மட்டுமின்றி தங்கள் விசுவாசத்தை பொய்யாக்கவோ அல்லது அதை திருப்பி கொடுக்க நிர்பந்திக்கும் போதும் விட்டுவிடாதிருக்கவோ செய்கின்றனர். இவைகள் முடிந்தவுடன் பிரிந்து போய் மறுபடியும் உணவு உண்ணும்படி, அதாவது சாதாரண குற்றமில்லா உணவு உண்ணும்படி ஒன்றுகூடுகின்றனர்.

இதனிமித்தம் நான் இந்த விசாரனையை தள்ளிவைத்து உன்னை கலந்தாலோசிக்க முடிவு செய்தேன். அவர்களின் எண்ணிக்கையை பார்த்தபடியினால், இதை உன்னோடு ஆலோசிக்க விரும்புகிறேன். ஏனெனில், எல்லா வயதினரிலும், எல்லா தரப்பினரிலும் மற்றும் எல்லா பாலினத்தவரிலும் அநேகம் பேர் இதனால் தண்டிக்கப்படக்கூடும். ஏனெனில், இந்த

நம்பிக்கையானது பட்டணங்களில் மட்டுமின்றி கிராமங்களிலும், பண்ணைகளிலும் பரவியுள்ளது". (புத்தகம் பத்து)


இந்தக் கடிதம் இரண்டாம் நூற்றாண்டின் முன்பகுதியில் கிறிஸ்தவத்தைப் பற்றிய விபரங்களின் ஒரு முக்கியமான ஆதாரமாகும். இதிலிருந்து, பித்தினியாவில் (Bithynia) இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை தேவனென்று ஆராதித்து, உயரிய ஒழுக்க மற்றும் நன்னெறி வரைமுறைகளை உடையவர்களாயிருந்து, கிறிஸ்துவை மறுதலிப்பதைவிட மரிக்கவும் ஆயத்தமாயிருந்தனர்; அதினால் கிறிஸ்தவம் எல்லா சமூகத்தினர் மற்றும் தரப்பினரிடமும், ரோமப் பிரஜைகள் உட்பட எல்லாரிடமும் அபரீத வளர்ச்சியடைந்தது.

**கொர்நெலியு தாசிதஸ் (Cornelius Tacitus) :**

2ம் நூற்றாண்டில் மிக முக்கியமான ரோம வரலாற்றாலர், 'தாசிதஸ்' ; மேலும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலான மிக முக்கியமான கிறிஸ்துவைப் பற்றிய குறிப்பை இவர் கொடுத்துள்ளார்.

கிறிஸ்துவின் மரணத்திற்கு பின் சுமார் 20 வருடங்களுக்கு பின் கி.பி.54ல் பிறந்த இவர், வெஸ்பாசியனுக்கு கீழ் சென்டராகவும், பின்பு ஆசியா மைனரின் பிரதிநிதியாகவும் இருந்தார். இவர் வரலாற்றைப் பற்றி எழுதிய தன்னுடைய 5 புத்தகங்களுக்காக நன்கு அறியப்பட்டவர்; மேலும் அவைகளில் 4 புத்தகங்கள் நிலைத்துள்ளன. மேலும் இவர், "அன்னல்ஸ்" என்னும் 12 பாகம் கொண்ட தொகுப்பையும் எழுதியுள்ளார்.

சுமார் கி.பி. 115ல், தாசிதஸ் தன்னுடைய அன்னல்ஸ் 15-44ல் எழுதியது என்னவெனில், கி.பி. 64ல் ரோமாபுரியை அழித்த நெருப்பின் நிமித்தமாக தன் மீது வந்த சந்தேகத்தை திசை திருப்பும்படி கிறிஸ்தவர்களை நீரோ மன்னன் கொலை செய்தான். மேலும் அவர் எழுதும்போது, "நீரோ தனது குற்றத்தை மறைக்க, தங்களுடைய செயல்களினால் வெறுக்கப்பட்ட, பெரும்பான்மையினரினால் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்ட ஒரு சமூகத்தினரின்மீது மிகக் கொடுமையான தாக்குதல்களை செயல்படுத்தினான். கிறிஸ்தவர் (கிறிஸ்து) என்பவரிடமிருந்து அவர்களுடைய பெயரைப் பெற்றனர்; மேலும் அவர், 'திபேரியஸின்' ஆட்சி காலத்தில் ரோம நாட்டின் ஒரு நிர்வாக அதிகாரியான பொந்தியு பிலாத்துவின் கரங்களால் கொடுமையான தண்டனை அனுபவித்தனர்.



ஆகையினால் மிகவும் துடுக்குத்தனமான மூடநம்பிக்கையினால் இத்தகைய செயல்கள் தீமையின் பிறப்பிடமான யூதேயாவில் மட்டுமல்ல,

உலகத்தில் அவமானத்திற்குரிய செயல்களின் மையமாக கருதப்படும் ரோமாபுரியிலும் நிகழ்ந்தன.

அதன்படி, முதலாவது குற்றவாளிகள் என கருதப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்; பின்னர் அவர்களுடைய தகவலின் பேரில், ஒரு திரளான கூட்டத்தாரும் குற்றவாளிகள் என தீர்மானம் செய்யப்பட்டனர்; இவர்களெல்லாம் ரோமாபுரியை எரித்த குற்றத்தினால் அல்ல, மாறாக மனிதகுலம் அவர்களை வெறுத்ததினாலேயே அவர்களுடைய மரணம் எல்லா வகையான கேலிக்கூத்துமானது. இந்தக் கூட்டத்தாரை, மிருகத்தின் தோலை போர்த்திக்கொண்டு, நாயைப் போல் கடித்து கொதறி அழித்தனர்; அல்லது சிலுவையில் ஆணியறைப்பட்டனர்; அல்லது இருள் சூழ்ந்த நேரத்தில் வெளிச்சத்தை கொடுக்கும்படியான நெருப்பாக உயிருடன் எரிக்கப்பட்டனர். இவைகளெல்லாம் நடைபெற நீரோ மன்னன் தனது தோட்டத்தைக் கொடுத்து, சர்கஸில் வேடிக்கைப் பார்ப்பது போல பார்த்தான்".

இங்கே தாசிதஸின் அறிக்கை என்னவெனில், திபேரிய ராயனின் ஆட்சியில் கிறிஸ்து உச்சகட்ட தண்டனையை (சிலுவை மரணம்) பொந்தியு பிலாத்துவின் கரத்தினால் அனுபவித்தார். எதிரிகளின் "துடுக்கான மூடநம்பிக்கைக்காக" இந்த கிறிஸ்தவர்கள் மரிக்கவும் ஆயத்தமானார்கள்; அது ஏனெனில் கிறிஸ்து கல்லறையினின்று மீண்டும் உயிருடன் எழுந்தார் என்ற அவர்களது நம்பிக்கையின் நிமித்தமே.

**கூடுதலான வரலாற்று ஆதாரங்கள் :**

இதைப்போன்ற கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ்தவத்தைப் பற்றியுமான குறிப்புகள் சமோசடாவை சேர்ந்த லூசியன் (Lucian of Samosata), மாரா பர்-செரபியன் (Mara Bar-Serapion), சியோடோனியஸ் (Suetonius), மற்றும் தாலஸ் (Thallas) ஆகியோரின் எழுத்துக்களிலும் காணப்படுகின்றன. ரோம பேரரசில் கிறிஸ்துவின் செல்வாக்கு இந்த வரலாற்று பதிவேடுகளில் தெளிவாகக் காணப்படுகிறது.

# 2

# ஆதி கிறிஸ்தவ பதிவேடுகள்

## Early Christian Documents

இதுவரை, யூத மற்றும் ரோம வரலாற்று ஆசிரியர்களின் சாட்சியங்களைக் கேட்டோம். ரோம வரலாற்றில் கிறிஸ்து எழுப்பியிருந்த விளைவையும் கண்டோம். இந்தப் பாடத்தில், ஆதி சபையின் முன்னோடிகளின் எழுத்துக்களை ஆய்வு செய்து, முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைத்தார்கள் என்பதைக் காண்போம்.

**ரோமாபுரியைச் சேர்ந்த கிலெமெண்ட்**

கிலெமெண்ட் என்பவர் கி.பி. 30-ல் பிறந்தார்; அப்போஸ்தலர்கள் காலத்தில் வாழ்ந்தார். அவர் ரோமாபுரியில் கி.பி.92-100-ல் பிஷப்பாக இருந்தார். கி.பி.95-ல் கொரிந்தியர்களுக்கு ஒரு நிரூபம் எழுதினார். பிலிப்பியர் 4:3-ல் குறிப்பிடப்படுகிற கிலமெந்து என்பவர் இவராக இருக்கலாம் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர். அவர் எழுதின முதல் நிருபத்தின் 32-ம் அதிகாரத்தில் கொரிந்தியர்களுக்கு, கிலெமெண்ட் எழுதியதாவது, "யாக்கோபு, தனது சகோதரனுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் தாழ்மையுடன் தனது சொந்த நாட்டிலிருந்து லாபானிடத்துக்குப் போய் அங்கே சேவை செய்தான்; அங்கே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் செங்கோல் அவனிடம் கொடுக்கப்பட்டது. ...அவனுடைய (வம்சாவளியில்) மாம்சப் பிரகாரமாக இயேசு கிறிஸ்து பிறந்தார்".

அதிகாரம் 24-ல் கிலெமெண்ட் எழுதுகிறார், "பிரியமானவர்களே, கர்த்தர் எப்படி தம்மை நமக்குத் தொடர்ந்து நிரூபித்து வருங்கால உயிர்த்தெழுதலையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முதற்பலனானவராக்கும்படி அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்".

ஒரு சபையின் முன்னோடியால் எழுதப்பட்ட பிந்தியகால திருமறைக்காலத்தின் பூர்வீகப் பதிவேடு இன்றும் இருக்கிறது. இயேசு யாக்கோபின் சந்ததியில் மாம்சத்தில் வந்தவர் என்பதையும், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம், நாமும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவோம் என்று நிரூபிக்கும்படி செய்தார்.

**இக்னேஸியஸ்**

இக்னேஸியஸ், சிரியாவிலுள்ள அந்தியோக்கியாவில் கி.பி. 107-110 ல் பிஷப்பாக இருந்தார். ஆதி சபை முன்னோடிகள் எழுதிய முக்கிய பதிவேடுகளில் இவருடைய ஏழு நிருபங்களும் இடம் பெற்றுள்ளன. கி.பி. 117ல், டிரேஜன் எனும்

சக்கரவர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்த போது, இக்னேஸியஸ் சிங்கத்தின் கெபியில், ரோமாபுரியில் போடப்பட்டார். தனது நிரூபங்களில், இயேசுவின் தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் வலியுறுத்தி இக்னேஸியஸ் எழுதியிருந்தார். தண்டிக்கப்படும்படி அவர் ரோமாபுரிக்கு போகும் பாதையில், அவர் ஒரு நிரூபத்தை எழுதி அதில் இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவை ஒரு வரலாற்றுச் சம்பவம் என்று குறிப்பிட்டார்:

''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தேவனால் முன் குறிக்கப்பட்டபடியே, மரியாளின் கர்ப்பத்தில், தாவீதின் வித்தாக, ஆனால் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டார்". அவர் பிறந்தார் ஞானஸ்நானம் பெற்றார், அவருடைய அளவு கடந்த நிலையில் தண்ணீரைக் கூட அவர் சுத்திகரித்தார்" (எபேசியர் 18).

தாவீதின் வம்சாவளியான இயேசு, மரியாளின் குமாரன், உண்மையாகவே பிறந்து, புசிந்தார் குடித்தார், பொந்தியு பிலாத்துவின் கீழ் உண்மையாகவே துன்புறுத்தப்பட்டு, வானத்திலுள்ளோர் பூமியிலுள்ளோரின் பார்வையில் உண்மையாகவே சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்; எல்லாவற்றுக்கும் மேலாக மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, அவருடைய பிதாதாமே அவரை எழுப்பினார், அதே போல அவரை விசுவாசிப்போராகிய நம்மையும் எழுப்புவார்" (டிரேல்லியன்ஸ் 9).

இக்னேஸியஸ் தொடர்ந்து "அவர் மெய்யாகவே", அவர் உண்மையிலேயே மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியும், ஆனால் தெய்வீக சித்தத்தின்படியும் வல்லமையின் படியும் உண்மையிலேயே கன்னிகையினிடத்தில் பிறந்து, யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லா நீதியையும் நிறைவேற்றி, உண்மையிலேயே மாமிசத்தின்படி பொந்தியு பிலாத்து, காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதின் ஆட்சியின் கீழ் ஆணியில் அறையப்பட்டார்; தாம் உயிர்த்தெழுந்ததின் மூலம் அனைத்து யுகங்களினூடே ஒரு அடையாளச் சின்னமாகத் திகழுகிறார். எனக்குத் தெரியும், நான் விசுவாசிக்கவும் செல்கின்றேன். அவர் உயிர்த்தெழுந்த பின்பும் மாமிசத்தில் இருந்தார்; அவர் பேதுருவிடத்திலும் அவருடைய சகாகக்களிடமும் வந்தபோது, அவர் அவர்களிடம், என்னைத் தொட்டு பிடித்துப் பாருங்கள், நான் ஒரு சரீரமற்ற பிசாசு அல்ல என்றார். அவர்கள் அவரைத் தொட்டுப்பார்த்து, விசுவாசித்தார்கள்; அவருடைய சரீரத்தோடும், இரத்தத்தோடும் சேர்ந்தார்கள். ஆகையால் அவர்கள் மரணத்தைப் பார்த்து பரியாசம் பண்ணி, இல்லை, தங்களை மரணத்து மேலானவர்களாய் கண்டார்கள். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர்களோடு புசித்தார், குடித்தார்" (சிமிர்னாக்காரர்கள் 1).

மக்னீயர்களுக்கு எழுதின தனது நிரூபத்தில் (கி.பி. 110-115), இக்னேஸியஸ் எழுதினதாவது, "பொந்தியு பிலாத்துவின் தேசாதிபத்தியத்தின் காலத்தில் நடந்த

நிகழ்ச்சிகளான பிறப்பு, உணர்ச்சி வேகங்களுக்குட்படுதல், உயிர்த்தெழுதலைக் குறித்து முழுமையாய் ஒப்புக் கொள்ளுங்கள்; இந்தக் காரியங்களெல்லாம் உண்மையாக நிச்சயமாக இயேசுவால், நமது நம்பிக்கைக்காக நடப்பிக்கப்பட்டன."

இக்னேஸியஸ் எழுதினவைகளில் அதிகமானவைகளில், தாங்கள் மட்டுமே ஆத்ம அறிவு சார்ந்தவர்கள் என எண்ணி, இயேசுவின் 'மாம்சத்தையும் – இரத்தத்தையும்' உடைய மனுஷீகத்தை ஏற்றுக்கொள்ளாத நம்பிக்கை கொண்டிருந்தவர்களைச் சாடத்தக்கதாக எழுதினார். கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் மறுத்து, கிறிஸ்தவ தொழுது கொள்ளும் பழக்கம் நான்காம் நூற்றாண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தர்க்கித்தும் பேசின, இன்றை தெய்வ நம்பிக்கையில்லாதவர்களுக்கும் இவை போதனைகளாக உள்ளன. இக்னேஸியஸின் நிரூபங்கள் மூலமாக, முதல் நூற்றாண்டில் துவக்கத்தில் இருந்த கிறிஸ்தவர்கள், இயேசு முற்றிலும் மனுஷீகம் உள்ளவராகவும் முற்றிலும் தெய்வீகமுள்ளவராகவும் இருந்தார் என்று விசுவாசித்தார்கள் என்பதை இக்னேஸியஸின் நிரூபங்கள் ஆதாரமளிக்கின்றன: இயேசு முற்றிலும் தெய்வம், முற்றிலும் மனுஷீகம் உள்ளவராயிருந்தார்.

**அரிஸ்டைட்ஸ்**

அரிஸ்டைட்ஸ் ஒரு தத்துவ ஞானியாகவும், பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவனாகவுமிருந்தார். கி.பி.125-ல் ஹாட்ரியன் எனும் சக்கரவர்த்தி அத்தனே (ஏதேன்ஸ்) நகரைப் பார்வையிடப் போன போது, அரிஸ்டைட்ஸ் அவருக்கு தேவனைக் குறித்த தற்பாதுகாப்புடன் கூடிய பயபக்தியை முன்வைத்தார். அரிஸ்டைட்ஸின் பரிந்துரை பின்வரும் கருத்துக்களையும் உள்ளடக்கியது.

"கிறிஸ்தவர்கள், தங்களுடைய மார்க்கத்தின் துவக்கத்திற்கு ஆதாரமாக மேசியாவாகிய இயேசுவிடமிருந்து வந்ததாக அடையாளம் காட்டுகின்றனர்; அவர் உன்னதமான தேவனுடைய குமாரன். தேவன் பரலோகத்திலிருந்து கீழே வந்ததாகவும், எபிரேய கன்னிகையினிடத்தில் பிறந்ததாகவும், அப்பொழுது மாமிச சரீரத்தைப் பெற்றுப்பிறந்ததாகவும் கூறப்படுகிறது; தேவனுடைய குமாரன் ஒரு மனுஷ குமார்த்திக்குள் வாழ்ந்தார். இவைகளெல்லாம் அவர்களுக்குள் கொஞ்ச காலம் மட்டுமே பிரசங்கிக்கப்பட்டவை, சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிற புத்தகங்களில் இவைகள் போதிக்கப்படுகின்றன; நீங்களும் கூட அவைகளை வாசித்துப் பார்ப்பீர்களேயானால், அதற்குள் இருக்கிற வல்லமையை கண்டுணர்வீர்கள். இந்த இயேசு, எபிரேய இனத்தில் பிறந்தவர்; தாம் மனுஷ அவதாரம் எடுத்து வந்ததன் நோக்கம் நிறைவேற்றப்படும் பொருட்டு, அவர் பன்னிரண்டு சீஷர்களைத் தமக்குக் கொண்டிருந்தார். ஆகிலும் அவர்தாமே யூதர்களாலே அவர் குத்தப்பட்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்;

மூன்று நாளைக்குப் பின்பு அவர் உயிர்த்தெழுந்து பரமேறிச் சென்றார் என்று சொல்லுகிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த பன்னிரண்டு சீஷர்களும் உலகத்தின் தெரிந்த பகுதிகளுக்கெல்லாம் சென்றனர், செல்லுமிடமெல்லாம் அவருடைய மகத்துவத்தைத் தன்னடக்கத்தோடும் நேர்மையோடும் கூறிக் கொண்டே இருந்தார்கள். அன்று துவக்கம் இன்று வரை அந்தப் பிரசங்கத்தை விசுவாசிக்கிற யாவரும் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர், அவர்கள் பிரசித்தமாகிறார்கள்".

**குவாட்ரேட்டஸ்**

அத்தேனே (ஏதேன்ஸ்) நகர பிஷப்பும், கிறிஸ்தவத்தின் தற்காப்பினிமித்தம், சக்கரவர்த்தி ஹாட்ரியன், அத்தேனே நகரத்தின் 'எழுசிஸ்' எனுமிடத்தில் நடைபெறும் இரகசிய மதச் சடங்காச்சாரங்கள் எனும் பண்டிகையில் கலந்து கொள்ள வந்திருந்த போது, தமது நம்பிக்கைகளை முன்வைத்தார்.

குவாட்ரேட்டஸ் ஹாட்ரியனுக்கு எழுதும்போது, "இரட்சகரின் செயல்கள் எப்போதும் உங்கள் முன்பு இருக்கிறது; அவைகள் உண்மையான அற்புதங்கள்; சுகமளிக்கப்பட்டவர்களும், மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களும், கண்ணிலே காணப்பட்டவர்களும், சுகமாக்கப்பட்ட போது மாத்திரமல்ல, உயிர்ப்பிக்கப்பட்டபோது மாத்திரமல்ல, எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், நம்முடைய ஆண்டவர் பூமியில் இருந்த காலத்தில் மட்டுமல்லாமல், பூமியை விட்டுப் போன பிறகும் கூட ஒரு நீடித்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் நமது நாட்களில் கூட வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்."

கிறிஸ்தவத்தின் இந்த பாதுகாப்பினிமித்தம், குவாட்ரெட்டஸ், இயேசு சுகப்படுத்தியவர்களும், மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களுமாகிய ஜனங்கள் தனது சந்ததி காலத்திலும் இருப்பதாக்க குறிப்பிட்டார்.

**ஜஸ்டின் மார்டிர்**

ஜஸ்டின் மார்டிர் என்பவர் யூதேயாவுக்கும் கலிலேயாவுக்கும் இடையேயான பாதி வழியில், (சீகேமில் உள்ள) ஃபிளேவியா நியோபோலிஸ் எனுமிடத்தில் கி.பி.100ம் ஆண்டு கிரேக்கப் பெற்றோருக்குப் பிறந்தவர். அவர் பேச்சுக்கலையிலும், கவிதையிலும், வரலாற்றிலும், தத்துவத்திலுமாக கல்வி கற்றவர். அவர் தனது கேள்விக்கு பதில் கண்டுபிடிக்கும் பொருட்டு ஒரு தத்துவ பள்ளியிலிருந்து மற்றொரு தத்துவப் பள்ளிக்கு மாறிமாறி போய்க் கொண்டிருந்தார்.

எபேசு பட்டணத்துக்கு அவர் போன போது, அமைதியாக மரித்த கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் (பக்தியினிமித்தம் உயிர்துறந்தோரின்) பெலத்தையும் உறுதியையும் கண்டு மனதில் ஆழமாக பதித்துக் கொண்டார். ஒருநாள்,

கடற்கரையில் நடந்து கொண்டிருந்தபோது வயதில் முதிர்ந்த ஒரு கிறிஸ்தவரை எதிர்பாராமல் சந்தித்தார். இந்த மனிதர் இயேசுவைக் குறித்தும் அவர் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டவைகளை நிறைவேற்றியதையும் ஜஸ்டினிடம் பேசினார்.

ஜஸ்டின், "உடனடியாக என் ஆத்துமா கொழுந்து விட்டு எரிந்து என்னில் ஒரு தூண்டுதலை உண்டாக்கியது, தீர்க்கதரிசிகளின் அன்பும், கிறிஸ்துவின் நண்பர்களின் நட்பும் என்னை ஆட்கொண்டன", என்று எழுதினார். தான் கிறிஸ்தவனான பின்பு, ஜஸ்டின் முதலில் எபேசுவிலும், பின்பு ரோமிலும் ஒரு கிறிஸ்தவ தத்துவப் பள்ளிகளைத் திறந்தார்.

ரோமில், குறை கூறும் தத்துவ ஞானியான, கிரஸன்ஸ், என்பவருடன் வழக்காடு மன்ற நிகழ்ச்சியில் பங்குபெற்றார். அதற்குப் பின்பு விரைவாக, அவர் குற்றப் படுத்தப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்படாத ஒரு மதத்தை ஊக்குவிக்கிறார்கள் என்று சொல்லி அவரை கைது பண்ணினார்கள். ரோமாபுரி அதிகாரிக்கு முன்பாக விசாரிக்கப்பட்டபோது, அவர் கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்தார். எனவே அவருடைய ஆறு மாணவர்களுடன் சேர்ந்து சிரச்சேதம் பண்ணப்பட்டு மரித்தார்.

கி.பி. 150-ல் டைர்போ என்பவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது நடந்தவைகளை, ஜஸ்டின் பின் வருமாறு எழுதுகிறார், "அவர் பிறந்த போது, அராபியாவிலிருந்து வந்த சாஸ்திரிகள் அவரைத் தொழுது கொண்டார்கள், முன்பு ஏரோதுவினிடத்தில் வந்து, பிறகு உங்கள் நாட்டுக்கே முதன்மையான ராஜாவானார்."

"அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தபோது, ஆணிகடாவி அவருடைய கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்; அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் அவருடைய அங்கியைக் குறித்துச் சீட்டுப்போட்டு, அவர்களுக்குள் கிடைத்த பங்கை எடுத்துக் கொண்டார்கள்".

"கர்த்தர் மரத்தின்மேல் ஏறத்தாழ சாயங்காலம் வரைத் தொங்கிக் கொண்டிருந்தார்; அந்த மாலைப் பொழுதிலேயே அடக்கம் பண்ணப்பட்டார்; பிறகு மூன்றாம் நாளில் அவர் மறுபடியும் உயிரோடு எழுந்தார்".

ஜஸ்டின் கி.பி. 150-ல், அந்தோனி பயஸ் என்பவருக்கு எழுதிய தனது கடிதத்தில், "எருசலேமிலிருந்து முப்பத்தி ஐந்து ஸ்தாதி தொலைவில் உள்ள ஒரு யூதர்கள் நாட்டுக் கிராமத்தில், இயேசு கிறிஸ்து பிறந்தார், இதை யூதேயாவிலிருந்த, உங்கள் முதல் ரோம அதிகாரி சிரேனியுவின் காலத்தில் இருந்த வரி செலுத்தப்பட்ட பதிவேடுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்".

"அதே போல, அவர் சிலுவையில் அறையப்பட்ட பின், அவருடைய சகாக்களே அவரைக் கைவிட்டு விட்ட பொழுது, அவரை மறுதலிக்கவும்

செய்தனர்; அதன் பிறகு, மரித்தோரிலிருந்து அவர் எழுந்து அவர்களுக்குக் காணப்பட்டார், அவர்கள் தீர்க்கதரிசனங்களை படித்துப் பார்த்தால் அவற்றில் சொல்லப்பட்டவைகளெல்லாம் நிறைவேறுகின்றதை அறிவார்கள் என்று சொன்னார், அவர்கள் அவர் பரமேறுவதைக் கண்டபோது, அவரை விசுவாசித்தார்கள்; அவராலே அனுப்பப்பட்ட பெலனையும் பெற்றார்கள்; மேலும் அவர்கள் ஒவ்வொரு தேசத்தாரிடத்திலும் போய், இவைகளைப் போதித்தார்கள். அவர்கள் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்".

### ரோமபுரியின் நிலத்தடிக் கல்லறைகள்

ரோமபுரிக்குக் கீழ், ஏறத்தாழ 600 மைல் தூரத்திற்கு பூமியின் கீழ்ப் பகுதிகளில் லட்சக்கணக்கான கிறிஸ்தவக் கல்லறைகள் இருக்கின்றன. இந்த நிலத்தடிக் கல்லறைகள் இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டுகள் வரையிலான காலக் கட்டத்தில் கல்லறைகளாகவும், உபத்திரவ நேரங்களில் தொழுகை செய்யும் இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

இந்தக் கல்லறைகள் வரைபடங்கள் (ஓவியங்கள்) மற்றும் கல்லறை வாசகங்கள் நிறைந்தவைகளாயிருந்ததன் மூலம், ரோம சாம்ராஜ்யத்தின் தலை நகரில் கிறிஸ்தவர்களின் ஆழமான விசுவாசம் தெரிய வருகிறது. பொதுப்படையாக பொறிக்கப்பட்டிருந்தவைகளில் ஒன்று மீன் உருவம், பெரும்பாலும் மீன் எனும்பதத்திற்கு "இஷ்துஸ்" எனும் கிரேக்க வார்த்தையைக் கொண்டிருந்தன. இந்த எழுத்துக்கள் இசியோஸ் கிறிஸ்டோஸ் என்னும் வார்த்தை வடிவ எழுத்துக்களின் கூட்டாகப் பொறிக்கப்பட்டன. தியோ யூயாஸ், என்றும் எழுதப்பட்டவை " தேவனுடைய குமாரனும் இரட்சகருமாகிய, இயேசு கிறிஸ்து" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நீங்கள் ரோமாபுரிக்கு எப்பொழுதாகிலும் போவீர்களானால் இந்த நிலத்தடிக் கல்லறைகளைப் போய் பார்வையிடுங்கள், அப்பொழுது நீங்களே அறிவீர்கள்.

# 3 தொல்பொருள் ஆராய்ச்சியிலிருந்து சாட்சியங்கள்

## Evidence from Achaeology

இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், ஆதி கிறிஸ்தவத்தைக் குறித்தும் தொல்பொருள் ஆராய்ச்சி வெளிப்படுத்துவது என்ன? புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை நிரூபிக்கும் வகையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏதாவது இடங்களையோ அல்லது கலை பொருட்களையோ கண்டுபிடித்துள்ளார்களா?

பண்டைய நகரங்களைத் தோண்டிப்பார்த்து, அல்லது இஸ்ரவேலின் பட்டணங்களையோ கிராமங்களையோ கூடத் தோண்டிப் பார்த்து, புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் (அகழ்வாராய்ச்சியாளர்கள்) புதிய ஏற்பாட்டின் வரலாறு மற்றும் பூகோள ரீதியான சரியான உண்மையைத் திரும்பத்திரும்ப உறுதிப்படுத்துகின்றனர். இப்படியாக, புதிய ஏற்பாட்டின் நம்பகத்தன்மையை உயர்த்தியிருக்கின்றனர்.

**வரலாற்று ஆசிரியராகிய லூக்கா :**

அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் தனது பெயரைச் சுமந்து நிற்கும் சுவிசேஷப் புத்தகத்தை, லூக்காதான் எழுதினார் என்பதற்கு உட்புறச் சாட்சியங்கள் குறிப்பிடுகின்றன. இந்த இரண்டு புத்தகங்களும் புதிய ஏற்பாட்டின் நான்கில் ஒரு பகுதியைக் கொண்டிருப்பதால், லூக்கா நம்பத் தகுந்தவரே என்று அறிவது முக்கியமானது.

அநேக ஆண்டுகளாக, பிற வரலாற்று ஆசிரியர்கள் 'லூக்கா ஒரு சார்புத் தன்மையுடைய வரலாற்று ஆசிரியர் அல்ல; ஏனெனில் அவர் குறிப்பிடும் ஜனங்கள் இடங்கள், மற்றும் சம்பவங்களெல்லாம் திருமறைக்கு அப்பால் வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை' என்று யூகித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், சமீப வருடங்களில் அகழ்வாராய்ச்சியாளர்கள் லூக்கா எழுதியவைகள் உண்மை என ஒப்புக் கொண்டு, அவரைக் குற்றப்படுத்தினவர்களை அமைதிப்படுத்தியுள்ளனர்.

**இயேசுவின் பிறப்பைச் சூழ்ந்திருந்த நிகழ்ச்சிகள்:**

இயேசுவின் பிறப்பைச் சூழ்ந்திருந்த நிகழ்வுகள் தவறானவை என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்லிக் கொண்டிருந்தனர் (லூக்கா 2:1-3). அந்த நேரத்தில் குடிமதிப்பு எழுதப்படும் சூழல் இருக்கவில்லை; எனவே அதற்காக ஜனங்கள் தங்களுடைய மூதாதைகளின் ஊர் ஜனங்களுக்கு போகவில்லை, சிரியாவின் இந்த கணக்கெடுப்புக்கு கட்டளையிடவில்லை, என்று அவர்கள் வாக்குவாதம் செய்கின்றனர்.

பிறகு அகழ்வாராய்ச்சியாளர்கள், ரோம அரசு ஒவ்வொரு பதினான்காவது வருடத்திலும் வரிச் செலுத்துகிற அனைவரையும் குடிமதிப்பு எடுத்து பதிவு செய்து வந்தது என்பதைக் கண்டுபிடித்தார்கள். கி.மு. 8வது ஆண்டில் அப்படியொரு கணக்கெடுப்பு நடந்ததையே லூக்கா அநேகமாக குறிப்பிட்டுள்ளார்.

அதற்குப் பிறகுதான், அந்தியோகிலாவிலிருந்த ஒரு பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மூலம் கி.மு.7ம் ஆண்டில் க்யரிநியஸ் சிரியாவின் தேசாதிபதியாக இருந்ததற்கான குறிப்பை அகழ்வராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். இப்பொழுது க்யரிநியஸ் சிரியாவில் இரண்டு முறை தேசாதிபதியாக, ஒரு முறை கி.மு. 7-ன் துவக்கத்திலும் மறுபடியும் கி.பி. 6லும் பதவி வகித்திருந்தார் என்று நம்பப்படுகிறது.

எகிப்தின் கட்டளைப்படி கணக்கெடுப்பினை முன்னிட்டு பேப்பரஸ் பதிவேட்டில் அனுப்பப்பட்ட கட்டளைக் குறிப்பையும் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்தக் குறிப்பில், "விரைவில் வரும் கணக்கெடுப்பை முன்னிட்டு, எந்தக் காரணத்துக்காகவாகிலும் தங்கள் சொந்த ஊரில் குடியில்லாதவர்கள் தங்கள் அரசுக்கு சம்பந்தப்பட்ட சொந்த ஊருக்குத் திரும்பவும், வந்து தங்கள் குடும்ப பதிவேடுகளை நிறைவு செய்ய வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது.

**லிசானியா :**

லூக்கா 3:1-ல் "திபேரியு இராயன் ராஜ்யபாரம்பண்ணின பதினைந்தாம் வருஷத்தில், அதாவது கி.பி. 27-ல், லிசானியா காற்பங்கு தேசமாகிய அபிலேனுக்கு அதிபதியாயிருந்தார்", என்று எழுத்தாளர் குறிப்பிடுகிறார். இதை கற்ற அறிஞர்கள் பரியாசம் பண்ணினார்கள். அவர்களுக்குத் தெரிந்த லிசானியா 36 கி.மு.விலேயே கொல்லப்பட்டு விட்டார்.

எப்படியிருப்பினும், அகழ்வாராய்ச்சியாளர்கள் தமஸ்கு (இன்றைய டமாஸ்கஸ்) பட்டணத்துக்கு அருகில் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட பதிவேட்டைக் கண்டுபிடித்தார்கள். அதில் லிசானியாவின் பெயரும், கி.பி. 14-முதல் 29 வரை அவர் காற்பங்கு தேசமாகிய அபிலாவுக்கு அதிபதியாக இருந்ததையும் கண்டார்கள். இது லூக்கா சொல்லுவது சரியே என மீண்டும் நிரூபிக்கிறது.

**பாலிடார்சஸ் :**

அப்போஸ்தலர் 17:6-ல் தெசலோனிக்கேயாவைச் சேர்ந்த சில அதிகாரிகளைக் குறிப்பிடும் சொல்லாக கிரேக்கப்பதமாகிய "பாலிடார்ச்ஸ்" எனும் வார்த்தைக் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பதம் கிரேக்க இலக்கியத்தில் தரமான ஒரு வார்த்தையாகப் பயன்படுத்தப்படவில்லையாதலால், கல்வி நிபுணர்கள் அப்படிப்பட்ட அதிகாரிகளைக் குறிப்பிடுகிற வார்த்தையில் லூக்கா தவறு செய்து விட்டார் என்றனர்.

பிறகு, அகழ்வாராய்ச்சியாளர்கள் முதல் நூற்றாண்டு தெசலோனிக்கேயா வளைவில் பொறிக்கப்பட்டிருந்த வார்த்தைகள் ஆரம்பித்து, "பாலிடார்ச்ஸ் காலத்தில்" என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தார்கள். சமீப வருடங்களில், அகழ்வாராய்ச்சியாளர்கள் முப்பத்தி ஐந்து எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பொருள்களில் ''பாலிடார்ச்ஸ்'' என்ற பதம் பயன்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தார்கள். அவைகளில் ஐந்து தெசலோனிக்கேயாவில் தோண்டியெடுக்கப்பட்டவை. அவை அனைத்தும் பவுலின் காலத்து தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மீண்டும் லூக்கா எழுதியது சரிதான், அவரைக் குற்றப்படுத்தியவர்கள் தவறு செய்துள்ளனர்.

**இக்கோனியம் :**

அப்போஸ்தலர் 14:6ல் லூக்கா லீஸ்திராவையும் தெர்பையையும் லிக்கவோனியாவில் இருப்பதாக குறிப்பிடுகிறார்; இக்கோனியாவில் அல்ல. வரலாற்று ஆசிரியர்கள் லூக்காவை குற்றப்படுத்தி, லூக்கா தவறாகக் குறிப்பிட்டுள்ளார்; இக்கோனியம், உண்மையில் லிக்கவோனியாவிலிருந்த ஒரு நகரம் என்றனர். அவர்களுடைய நம்பிக்கையை ரோம ஆசிரியர்களான சிஸரோ, ஸ்ட்ரேப்போ மற்றும் பிளைனி ஆகியோரது புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் சரியில்லாததும் நம்பத்தகுந்ததல்ல என்றும் எழுதினார்கள்.


1910-ம் ஆண்டு, சர்வில்லியம் ராம்ஸே என்பவர் ஒரு நினைவுச் சின்னத்தை கண்டுபிடித்தார். அதில் இக்கோனியம் என்பது பிரிகியாவிலுள்ள ஒரு பட்டணம், லிக்கவோனியா நகரத்தில் இருக்கும் ஒரு பட்டணமல்ல என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தார். இரண்டு பலகைகள் இக்கோனியாவில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் பவுல் அங்கு சென்று வந்தபின் இரண்டு நூற்றாண்டுகள் வரை பிரிகியா மொழி பேசவும் எழுதவும், இருந்த மொழியாகக் குறிப்பிடப்பிட்டதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மீண்டும், லூக்கா எழுதினவைகள் சரி, அவரைக் குற்றப்படுத்தினோர் தவறு செய்கின்றனர்.

சர்வில்லியம் ராம்ஸே அகழ்வாராய்ச்சியாளர்களிலே பிரதானமானவர்களில் ஒருவர்; அவர் லூக்கா சுட்டியுள்ள முப்பத்திரண்டு நாடுகளையும், ஐம்பத்தி நான்கு நகரங்களையும், ஒன்பது தீவுகளையும் ஆய்வு செய்தார். அவற்றில் ஒன்று கூட தவறாக (லூக்கா) குறிப்பிடவில்லை.

லூக்கா வரலாற்று இடங்களையும் சம்பவங்களையும் ஜாக்கிரதையாக அறிக்கை கொடுத்து சரியாக எழுதியிருக்கிறாரென்றால், இன்னும் அதிகமான விஷயங்களைக் குறிப்பிடுவதில் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்திருப்பார் என்று நம்புவதற்கு சிறப்பான காரணங்கள் உண்டு. அந்த அதிமுக்கியமான விஷயங்கள் இயேசு கிறிஸ்துவின் அற்புதங்கள், போதனைகள், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவையே!

**கபாத்தா (தளவரிசைப்படுத்தின மேடை)**

இயேசு விசாரிக்கப்பட்டு பிலாத்துவினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட இடமாகிய கபாத்தா எனும் கல்பாவப்பட்ட தளவரிசை மேடை என்று ஒரு விசாரணைக்கூடம் வரலாற்றுப் பதிவேட்டில் இல்லை என்பது தெய்வ நம்பிக்கையற்றோரின் வாதம் (யோவான் 19:13). தெய்வ நம்பிக்கையற்ற அவர்கள் கபாத்தா என்பது ஒரு கட்டுக்கதை, யோவான் சுவிசேஷம் ஒரு வரலாற்றுப் படைப்பு அல்ல என்கின்றனர்.



ஆயினும், சமீபத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் கபாத்தா என்பது அன்டோனியா கோபுரம் எனும், எருசலேமிலிருந்த ரோம இராணுவத் தலைமையகம் தான்; விசாரணைக் கூடமாக இருந்தது என்று காட்டினார். விசாரணைக் கூடம் கி.பி. 66-70ல் எருசேலம் முற்றுகையிடப்பிட்ட போது பூமிக்குள் புதைந்து போயிற்று. ஹாட்ரியனின் ஆளுகையின் போது, திரும்பக்கட்டபட்ட போதிலும், தளவரிசை மேடை அகழ்வாராய்ச்சியாளர்கள் தோண்டி எடுக்கும் வரை புதைந்த நிலையிலேயே சமீப காலம் வரை இருந்தது. பிலாத்துவுக்கு முன்பாக இயேசு விசாரிக்கப்பட்ட போது இருந்த அந்த மேடையின் மேல் இப்பொழுது நீங்கள் நடந்து செல்லலாம். (அருகிலுள்ள படம்)

**யோவான் சுவிசேஷம்**

தெய்வ பயமற்ற பரியாசக்காரர்கள் யோவான் சுவிசேஷம் நம்பிக்கைக்கு உகந்தது தானா என்று ஒரு முறை கேள்வி எழுப்பினர். ஏனெனில் வரலாற்று ஆசிரியர்களுக்கே தெரிந்திராத இடங்களைச் சுட்டிக்காட்டி இதன் ஆசிரியர் எழுதியுள்ளார் என்றனர். இந்தக் குற்றம் கண்டுபிடிப்போர் அப்புத்தகத்தின் ஆசிரியர் சரியான தகவல்களை பெற்று எழுதவில்லை; ஆகையால், சுவிசேஷம் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் இடங்கள் ஆகியவற்றிலிருந்து வெகுதூரமாகிய இரண்டாம் நூற்றாண்டில் அவர் வாழ்ந்திருக்க வேண்டும், என்கின்றனர்.

ஆயினும், சமீப வருடங்களில், அகழ்வாராய்ச்சியாளர்கள் தெய்வ பயமின்றி பரியாசம் பண்ணுகிறவர்களை தங்கள் வார்த்தைகளை வாபஸ் பெற கட்டாயப்படுத்துகின்றனர். ஏராளமான கண்டுபிடிப்புகள் யோவான் எழுதின சுவிசேஷம் மிகச் சரியானது என நிரூபித்துள்ளது.

**பெதஸ்தாகுளம்**

வாத நோயிலிருந்த ஒரு மனுஷனை பெதஸ்தா குளத்தருகே இயேசு சுகப்படுத்தினார் என்று யோவான் சொல்லுவதை ஒரு உதாரணமாகக்

காண்கிறோம் (யோவான் 5:1-15). யோவானின் எழுத்துப்படி, இந்தக் குளத்தைச் சுற்றிலும் ஐந்து ம ண்டபங்கள் இருந்தன.

பரியாசக்காரர்கள் இதை சுட்டிக் காட்டி யோவான் சுவிசேஷம் சரியானதல்ல என்பதற்கு இதுவே உதாரணம் என்றனர். இப்படியொரு இடத்தை யாரும் எப்பொழுதும் கண்டதில்லை என்கின்றனர்.

ஆயினும் சமீபத்திய வருடங்களில், அகழ்வாராய்ச்சியாளர்கள் எருசேலமின் வடகிழக்குப் பகுதியில் பெதஸ்தாகுளத்தை புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். அதன் தண்ணீர் மட்டம் பூமிக்குக் கீழ் நாற்பது அடி தளத்தில் இருந்தது; குளத்தைச் சுற்றிலும் தூண்களால் நிறுத்தப்பட்ட ஐந்து மண்டபங்கள் அல்லது யோவான் குறிப்பிட்டபடி நடைபாதை தூண் கொண்ட கூரைகள் உள்ளன.

**காய்பாவின் கல்லறைக் குகை**

புதிய ஏற்பாடு இயேசுவை கைதியாக்கிய வருடத்தில் யூதர்களின் பிரதான ஆசாரியனாக காய்பா இருந்தான் என்று சொல்லுகிறது. அவர் விசாரிக்கப்பட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் (மத்தேயு 26:3,57; யோவான் 11:49; 18:14, 28). ஆனால் தேவாலய பதிவேடுகளெல்லாம் கி.பி. 70-ல் ரோமர்களால் அழிக்கப்பட்டன. யூத வரலாற்றுப்படி காய்பா என்று ஒருவர் இருந்ததற்காக ஆதாரத்தை சரிபார்க்க இயலவில்லை.

1990-ல், ஒரு கூட்ட கட்டிடப் பணியாளர்கள் ஒரு தண்ணீர் பூங்காவை எருசலேமில் கட்டிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக ஒரு பண்டைய கல்லறைக்குகையை தோண்டிக் கண்டுபிடித்தனர். அந்தக் கல்லறைக் குகையில்




அறுபது வயது மதிக்கத் தக்க ஒருவரின் சடலத்தை கண்டார்கள்; அது பிரதான ஆசாரியனாகிய காய்பாவாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. உடைந்திருந்த அந்தப் பெட்டகத்தின் மேல் (அவரது எலும்புகளைக் கொண்டிருந்த கல்லினால் செய்யப்பட்ட பெட்டி) யெகோசெஃப்பார் கயாஃபா (காய்பாவின் குமாரனாகிய காய்பா) என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தக் குகையில் காணப்பட்ட வெண்கலக் காசுகள், முதலாம் ஏரோது அக்ரிப்பாவின் ஆளுகை காலத்தில் கி.பி. 42-43ல் அடிக்கப்பட்ட நாணயங்கள்.

ஜோசிபஸ் (வரலாற்று ஆசிரியர் ) குறிப்பிடும்போது, யோசேப்பு என்பவர் காய்பா என்றும் அழைக்கப்பட்டவர், கி.பி. 18 லிருந்து 36 வரையிலான ஆண்டுகளில் எருலேமில் பிரதான ஆசாரியனகாக இருந்தார். யோசேப்பு என்பது அவருக்கு இடப்பட்ட பெயர்; காய்பா என்பது அவருக்கு கொடுக்கப்பட்ட செல்லப் பெயர்.

## வேறுசில அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகள்

மீண்டும் மீண்டும், புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் புதிய ஏற்பாட்டின் சரியான வரலாற்று மதிப்பீடு உறுதி செய்யப்பட்டது. பிரச்சனைக்குரிய இடங்களெல்லாம் ஒவ்வொன்றாக கண்டுபிடிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது.



அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு நன்றி! இப்பொழுதும் நாம் பெத்லகேமில் இயேசுவின் பிறப்பிடத்தை போய் பார்வையிடலாம், இயேசு வளர்ந்த நாசரேத்து ஊரைக்காணலாம், அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷனை கப்பர் நகூம் ஜெப ஆலயத்தில் இயேசு சுகமாக்கிய இடத்தைக் காணலாம், இயேசு சுகப்படுத்திய பேதுருவின் மாமியார் வீட்டைக் காணலாம், இயேசு ஒரு பிறவிக் குருடனை சுகப்படுத்திய சீலோவாம் குளத்தைக் காணலாம், இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவு தனிமையில் ஜெபித்த கெத்சமனேத் தோட்டத்தைக் காணலாம், இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படும்படி எருசேலமுக்குள் நுழைந்த பொன் வாசலைக் காணலாம், அங்கு அவர் வாரினால் அடிக்கப்பட்டு மரண ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டார். இயேசு பிலாத்துவினால் மரண ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டபோது, இயேசு நின்றுகொண்டிருந்த சமதள மேடையையும், கிறிஸ்து தமது சிலுவையை சுமந்து கொண்டு மிகுந்த வலியினூடே சென்ற கல்வாரிப்பாதையில் நடக்கலாம், எம்மாவூருக்குச் செல்லும் பாதையில் விரக்தியுடன் போய்க் கொண்டிருந்த இரண்டு சீஷர்களுடன் தாம் உயிர்தெழுந்த பின் தரிசனம் கொடுத்த இடத்திற்கு மெதுவே நடந்து உலாச் செல்லாம்.

## முடிவுரை

இந்தப் பாடத்தில் புதிய ஏற்பாட்டின் சரியான உண்மை தன்மையை நிரூபிக்க, அகழ்வாரய்ச்சியாளர் மேற்கொண்ட கண்டுபிடிப்புகளில் சிலவற்றை மட்டுமே மாதிரிக்காகக் கண்டோம். 'நெல்ஸன் குளுயிக்' எனும் யூத புதை பொருள் ஆராய்ச்சியாளர் " எந்தவொரு அகழ்வாரய்ச்சி கண்டுபிடிப்பும் திருமறை குறிப்புகளுக்கு முரணானவைகளாக ஒருபோதும் இருந்ததில்லை என்று எந்தவித சந்தேகமுமின்றி நம்மால் சொல்ல முடியும்" என்று சொன்னார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், திருமறைக்கும் அகழ்வாராய்ச்சிக்குமிடையே எந்தவொரு முரண்பாடும் ஏற்பட்டதில்லை.

'சர் வில்லியம் ராம்ஸே' எப்பொழுதுமே ஒருமிகப் பெரிய அகழ்வாராய்ச்சியாளர்களில் ஒருவர் என அறியப்பட்டவர்; அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் முற்றிலும் வரலாற்று தவறுகளைக் கொண்டது என்று சொன்னார். ஆயினும் அவரது கண்டு பிடிப்புகளே, அவரது எண்ணத்தைத்

திரும்பப் பெற வைத்தது. அவர் "லூக்காவின் வரலாற்றுக் குறிப்புகளின் விளக்கம் அதிசயமான சத்த்'யங்களைக் காட்டுகிறது" என்றார்.

முடிவில், சர் வில்லியம் ராம்ஸே", லூக்கா ஒரு முதல் தரமான அந்தஸ்து பெற்ற ஒரு வரலாற்று ஆசிரியர்; அவர் வெளியிட்ட உண்மைகள் நம்பத் தகுந்தவை மட்டுமல்ல, ஆனால் அவர் உண்மையான வரலாற்று நுட்பத்தைப் பெற்றிருந்தவர்... சுருங்கச் சொல்லின் இந்தபுத்தக ஆசிரியர் மிகப்பெரிய வரலாற்று ஆசிரியர்களின் வரிசையில் இடம் பெற வேண்டியவர்" என்றார்.

சார்ப்புத்தன்மை பெற்ற புதிய ஏற்பாட்டு பதிவேடுகள்-அகழ்வாரய்ச்சி, அறிவியல் கண்டுபிடிப்புகளால் தொடர்ந்து உறுதியாக்கப் படுகிறது.

# 4 பதிவேட்டுச் சான்றுகள்
## Documentary Evidence

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களாலும், அவர்களுடைய உடன் ஊழியர்களாலும் தான் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது, இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களும், உண்மைக்கும் கட்டுக் கதைகளுக்கும் வித்தியாசங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று அறிக்கையிட்டவர்களுமான ஆசிரியர்களால் எழுதப்படவில்லை என்று நமக்கு எப்படித் தெரியும்?

இரண்டாவதாக, ஆரம்ப ஆசிரியர்களால் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் தான் இன்று நம்மிடத்தில் இருக்கிற புதிய ஏற்பாடு என்று நாம் எப்படி உறுதிப்படுத்த முடியும்? அதிலே எந்த வித கலப்படமும் நடைபெறாமலும், உண்மையைத் திரித்துக் கூறாமலும் நமக்குக் கொடுக்கப்பட்டதாக நாம் எப்படித் தெரிந்து கொள்வது? நூற்றாண்டுகளினூடே புதிய ஏற்பாட்டை மறுபடியும் நகல் எடுத்த வேதபாரகர்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை என்று எப்படி நாம் நிச்சயப்படுத்திக்கொள்வது? இந்தப் புத்தகங்களின் ஆரம்பக்கட்ட மூலப்பிரதிகளின் நகல்களைக் கொண்டிருந்த மக்கள் இரகசியமாக மோசமான உள்ளடி வேலைகளுக்கு துணை போகாமல் இருந்தார்கள் என்று நாம் எப்படி அறிவோம்?

இந்தப்பாடத்தில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேடுவோம்.

**"வாழ்க்கை வரலாற்றுப்" பரிசோதனை**

அனைத்து புராதன வரலாற்றுப் பதிவேடுகளும் "வாழ்க்கை வரலாற்றுப் பரிசோதனைக்குக்" கட்டுப்பட்டது, நம்மிடத்தில் உள்ள நகல்கள் மூலப்பிரதிகளின் உண்மையான முகவர்கள்தானா, மாற்றங்களுக்குரியவைகளா, தவறுகள் உள்ளவைகளா, அல்லது இரகசிய ஏமாற்று வேலைகளுக்கு உட்பட்டதா என்று எப்படித் தீர்மானிக்க வேண்டும்? இந்தப் பரிசோதனையில் கேட்கப்படும் கேள்விகள் வருமாறு:

1. *"கேள்விகளின் அடிப்படையில் எத்தனை நகல்கள் இருக்கின்றன?"* எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான நகல் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவாய் சுலபமாக ஒன்றையொன்று ஒப்பிட்டு எந்த மாற்றங்கள் இருந்தாலும் கண்டுபிடிக்க முடியும்.

2. **"இந்த நகல்களை எங்கே கண்டுபிடிக்கலாம்?** அவைகள் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், இரகசிய ஏமாற்று வேலைகளுக்கு வாய்ப்பு உண்டு.

ஆனால் அவைகள் வித்தியாசப்பட்ட, ஒன்றுக்கொன்று தொலைதூரத்தில் இருந்தால் (காலத்தாலும், இடங்களாலும் வேறுபட்ட இடங்களில் இருந்தால்) இரகசிய ஏமாற்று வேலைகள் (உள்ளழி) நடந்திருக்க வாய்ப்பில்லை.

3. "மூலப்பிரதிகளுக்கும் ஆரம்பகால நகல்களுக்கும் இடையே எவ்வளவு காலம் கடந்து போயிருக்கக் கூடும்?" மூலப்பிரதி எழுதப்பட்டு நூற்றாண்டுகள் கழித்து ஆரம்ப கால நகல்கள் எழுதப்பட்டிருந்தால், மாற்றங்கள் செய்யப் பட்டிருக்கக் கூடும். எந்த அளவு இடைவெளி காலம் குறைந்துள்ளதோ அந்த அளவுக்கு குறைந்த மாற்றங்களே செய்திருக்க முடியும். குறுகிய கால இடைவெளி பதிவுஏடுகளின் நம்பகத் தன்மையைக் கூட்டும்.

4. "நகல்களுக்கிடையில் காணப்படும் வித்தியாசங்கள் என்ன?" பதிவேட்டின் நகல்கள் எண்ணிறைந்த குறிப்பிடத்தக்க வித்தியாசங்களைக் கொண்டிருந்தால், ஆரம்ப ஆசிரியர் மூலப்பிரதியில் என்ன எழுதினார் என்று தீர்மானிப்பது சாத்தியமில்லை. வித்தியாசங்கள் குறைவாகவும் சிறியவைகளுமாயிருப்பின், மூலப்பிரதியின் உண்மை நகல்கள் எவையெனத் தீர்மானிப்பது சாத்தியம்.

**புதிய ஏற்பாட்டுக்கும் "வரலாற்றுப் பரிசோதனையை" பயன்படுத்தல்**

இப்பொழுது, நாம் "வரலாற்றுப் பரிசோதனையை" புதிய ஏற்பாட்டுக்கும் பயன்படுத்தி, எப்படிப்பட்ட பதில்களைப் பெறுகிறோம் என்று காண்போம்.

1. கிரேக்கப் புதிய ஏற்பாட்டு நகல்கள் எத்தனை (நகல்கள்) இருக்கின்றன? புராதன கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் புதிய ஏற்பாட்டின் முழுவதையுமோ அல்லது பகுதிகளையோ கொண்டதாக 5,700 நகல்கள் உள்ளன. இதோடு, இலத்தீன் மொழியில் 10,000 நகல்களும், எத்தியோப்பியா, சிலேவிக், அர்மேனியா மற்றும் பிற மொழிகளில் 9,300 நகல்களும் இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக, தோராயமாய், புதிய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகள், ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கதாக 24,000 புராதன நகல்கள் உள்ளன. ஒப்பீட்டு அடிப்படையில், பிளாட்டோ மற்றும் பிளைனி எழுதிய பிரதிகள் ஏழு நகல்களும், ஏரோடோஸ் மற்றும் துசிடஸ் எழுதிய வரலாற்றுக் காவியங்கள் எட்டு நகல்களும், இராயனின் கேலிக் யுத்தங்கள் பத்து நகல்கள், டேசிசிட்டஸ்ஸின் ஏகாதிபத்திய ரோம அரசின் கால அட்டவணைக் குறிப்பேடு மற்றும் லிவி எழுதிய ரோமாபுரியின் வரலாறு இருபது நகல்களும், டெமோஸ்தனிஸின் 200 நகல்களும், ஹோமர் இல்லியாஸ் எழுதிய 643 நகல்களும் உள்ளன. மற்ற எல்லா புராதன பதிவேடுகளையும் ஒன்று சேர்த்தாலும் புதிய ஏற்பாட்டு நகல்கள் அவைகளைக் காட்டிலும் ஏராளமான அதிக நகல்களைக் கொண்டுள்ளன.

2. புதிய ஏற்பாட்டு நகல்கள் எங்கே காணப்படுகின்றன? அவைகள் அநேக இடங்களில் காணப்படுகின்றன: எகிப்து, கிரேக்கம், இத்தாலி, சிரியா, துருக்கி போன்ற இடங்களில் இப்படி அதிக அளவில் விநியோகிக்கப்பட்டு பரவிவரும் நகல்களில் உள்ளடி வேலை (ஏமாற்றுவேலை) நடக்குமா என்பது புராதன காலத்தில் சாத்தியமில்லாதது.

3. பூர்வீக புதிய ஏற்பாட்டு மூலப் பிரதிகளுக்கும், நகல்களுக்குமிடையே எவ்வளவு கால இடைவெளி இருந்திருக்கக் கூடும்? ஜான் ரைலண்டின் குற்றம் காணப்படாத பழங்கால புதிய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதி கி.பி. 125-ல் எழுதப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. நிபுணர் ஒருவர் கி.பி. 100 என்று தேதியை தோராயமாய்க் குறிப்பிடுகிறார். இந்தக் கிரேக்கப்பகுதி பிரதியில் யோவான் சுவிசேஷப் புத்தகத்திலிருந்து, ஒரு சிறிய பகுதியான யோவான் 18:31-33, 37-38 ஆகியனக் காணப்படுகின்றன. (பின்வரும் படத்தைப் பார்க்கவும்)


1992-ல், டாக்டர் கார்ஸ்டென் தியேட் எனும் ஜெர்மானியர், பாப்பிரஸ் எனும் தாவரத் தாளின் கையெழுத்துப் பிரதிகளின் ஆராய்ச்சியாளர் என நன்கு அறியப்பட்டவர் (பழங்காலத்தின் பாப்பிரஸ் கையெழுத்தப் பிரதியியை கற்றவர்), ஒரு திடுக்கிடும் செய்தியை அறிவித்தார். அவர் ஐந்து பாப்பிரஸ் கையெழுத்துப் பிரதிகளில் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய புத்தகங்களின் வேத வசனப் பகுதிகள் அடங்கியுள்ளன. இவற்றின் காலம் கி.பி. 50-68 என்று சொன்னார். தியேட் குறிப்பிட்டவைகள் உண்மையாயின், இந்த சுவிசேஷ நகல்கள் மூலப்பிரதிகள் எழுதப்பட்ட பத்தாவது ஆண்டிற்குள் (நகல்) எடுக்கப்பட்டவை.

பாப்பிரஸ் கையெழுத்துப் பிரதிகளின் துண்டுப்பகுதிகளாக 99 நகல்களில் மற்றுமொரு புதிய ஏற்பாட்டு வசனப் பகுதி காணப்படுகிறது. செஸ்டர் பியாட்டி பைப்பரி என்னும் தாள்களில், புதிய ஏற்பாடு முழுவதும் இல்லாவிட்டாலும், அதிகமான நகல்கள் கி.பி.200 வாக்கில் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது.

மிக முக்கியமாக, மூலப்பிரதி எழுதப்பட்டு 300, 400 வருடங்களுக்குப் பின் முழுமையாகவும், முழுமையடையும் தருவாயிலுமாகக் காணப்படும் நகல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கோடெக்ஸ் (புத்தகம் என்பது பொருள்) வாடிக்னாஸ் என்பது ரோமிலுள்ள வாடிக்கன் நகரில் உள்ளது, இந்தப் புத்தகம் தான் கி.பி. 325-ல் கான்ஸ்டன்டைன் சக்கரவர்த்தி கேட்டு வாங்கிய மூலப்பிரதியின் நகல்கள் என்று கருதப்படுகிறது. (படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது)

கோடெக்ஸ் சினாய்டிகஸ், புனித கேத்ரின் துறவிகள் மடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது, அது சீனாய் மலையில் அடிவாரத்தில் உள்ளது. அந்த நகலில் புதிய ஏற்பாட்டின் முழுப் பகுதியும் அடங்கியுள்ளது; எழுதப்பட்ட நகலின் தேதி கி.பி. 350 (இந்த துறவுமடம் கீழேயுள்ள படத்தில் காணப்படுகிறது.)

கோடெக்ஸ் அலெக்ஸாண்ட்ரிஸ் என்பது எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இவைகளோடு கூட கி.பி.100-500ல் நகல் எடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டின் கிரேக்கம், லத்தீன், சிலேவியன், எத்தியோப்பியா, சிரியா மற்றும் அர்மெனியன் மொழிகளில் நூற்றுக்கணக்கான நகல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



முன்னாள் பிரிட்டிஷ் அரும்பொருட்காட்சியகத்தின் இயக்குனர் சர் ஃபிரட்ரிக் கென்யான், "புதிய ஏற்பாட்டைப் போல மூலப்பிரதிகள் கோர்க்கப்பட்டு குறுகிய காலத்திலேயே நகல் எடுக்கப்பட்ட புத்தகம் வேறு எதுவுமில்லை என்றும் சொன்னார்.


நாம் குறிப்பிட்ட வரலாற்றுப் புத்தகங்களோடு ஒப்பிடுவோம்: ஏரோடோடஸின் வரலாற்று ஆரம்ப கால நகல் அதின் மூலப் பிரதிகளிலிருந்து 1,350 வருடங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்டது. தூஸ்டைடெஸின் மூல வரலாற்று நூல், எழுதப்பட்டு 1300 ஆண்டுகால இடைவெளிக்குப்பின் நகல் எடுக்கப்பட்டது. சக்கரவர்த்தி ( சீஸரின் ) கேலிக் யுத்தங்கள் எழுதப்பட்டதற்கும் நகல் எடுக்கப்பட்டதுக்கிடையேயான காலம் 1000வருடம் , டெமோஸ்தனிஸின் புத்தகம் 1,400 ஆண்டுகளுக்குப் பின் நகல் எடுக்கப்பட்டது. டேஸிசிட்டஸின் ஏகாதிபத்திய ரோம அரசின் கால அட்டவணைக் குறிப்பேடு, 750 ஆண்டுகள், வரலாறு 950 வருடங்களுக்குப் பிறகு நகல் எடுக்கப்பட்டன. இருந்தும், இந்த வரலாறுகளெல்லாம், நமது பள்ளிக் கூடங்களில் நம்பகத் தன்மையுடன் போதிக்கப்படுகின்றன.

மற்ற எந்த பதிவேடுகளையும் விட புதிய ஏற்பாடு மிக அதிகமான கையெழுத்துப் பிரதிகளால் ஆதாரமளிக்கப்பட்டுள்ளது; மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கப்பட்ட இடைவெளி காலம் குறுகிய நூற்றாண்டுகளே.

4. நகல்களுக்கிடையே காணப்படும் வித்தியாசங்கள் என்ன? உண்மையில், ஆயிரக்கணக்கான பதிவேடுகளில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த கையெழுத்துப் பிரதிகளெல்லாம், நகல் எடுக்கும் (நகல் பெருக்கி) இயந்திரங்கள் மூலம் எடுக்கப்படவில்லை என்பதை மனதில் கொள்வது அவசியம். தவறுகள் நேராதபடி பெரிய கவனம் செலுத்தியும், மனிதர்களின் தவறுகள் சாத்தியமானதே. எப்படியாயினும், நகல் எடுப்போரில் பெரும்பாலானவர்களின், குறைந்தபட்ச எழுத்துத் தவறுகளும், வார்த்தை (வாக்கிய) வடிவமைப்பும் தான்.

**சர். ஃபிராட்ரிக் கென்யான், 'புதிய ஏற்பாட்டு வசனங்கள்... மற்ற எந்த புராதான இலக்கியங்களைக்காட்டிலும், சிறப்பான சான்றளிக்கப்பட்ட புத்தகம்" என்று எழுதினார். "அதற்கு உண்டான பிரச்னைகளும் கஷ்டங்களும், சாட்சிகள் போதுமானவைகளாக இல்லை என்பதினாலேயல்ல, அதற்கு கொடுக்கப்பட்ட மிக அதிகமான சாட்சியங்களால் தான்" என்றார்.**

திருமறையின் கோட்பாடுகளில் குறைகாணுவோர், திருமறையில் ஆயிரக்கணக்கான பதினாயிரக்கணக்கான தவறுகள் உள்ளன என்று கூறுகின்றனர். அவர்கள் குறிப்பிடுவதெல்லாம், எழுத்து தவறுகள் கொண்ட



வார்த்தைகள், விடுபட்ட வார்த்தைகள், மேற்கோளிடப்பட வேண்டிய வாக்கியங்கள்'', போன்றவைகளையே சுட்டிக் காட்டுகின்றனர். 5,700 கிரேக்க கையெழுத்துப் பிரதிகளிலிருந்து இந்த குறைகளை சுட்டிக் காட்டுகின்றனர். ஒரு வார்த்தை மூலப்பிரதியிலிருந்து 3000 நகல்களில் தவறாகப் குறிப்பிடப்பட்டால் 3,000 வித்தியாசங்களை பதிவேடு சுட்டிக் காட்டுகிறது. ஹோமர் இல்லியார்டின் புத்தகத்துடன் ஒப்பிட்டால், ஒரு விழுக்காட்டில் 1/2 பகுதி மட்டுமே வித்தியாசத்தை ஏற்படுத்தும் பிரச்னை, திருமறையின் உபதேசக் கோட்பாடு வித்தியாசங்களினால் எவ்விதத்திலும் ஊறு விளைவிப்பதில்லை. கையெழுத்துப் பிரதிகள் ஒன்றையொன்று ஒப்பிட்டுப் பார்த்து, நிபுணர்கள் புதிய ஏற்பாட்டின் மூலப் பிரதிகளில் ஒப்பீடுகள் மூலம் 99.5 சதவீதம் மிகச் சரியாக இருப்பதாக வாக்கு மூலம் அளிக்கின்றனர். ஆணித்தரமான முரண்பாடுகள் வெற்றிகரமாக ஒத்துப் போகின்றன.

சர் ஃபிரட்ரிக் கென்யானின் வார்த்தைகளில், "சந்தேகத்திற்கான கடைசி அஸ்திவாரமும் வசனங்களின் உறுதியளிக்கப்பட்ட சான்றுகளால், எதிராய் எழுதப்பட்டவைகள் எடுத்தெறியப்பட்டன என்றனர்.

புதிய ஏற்பாட்டுக்கு வைக்கப்பட்ட "புத்தகப்பட்டியல் பரிசோதனையிலும்" அதிக மதிப்பெண்களோடு வெற்றிபெற்றுவிட்டது.

**புதிய ஏற்பாடு எழுதப்பட்ட தொடக்க ஆண்டுகளுக்கான சாட்சியங்கள்.**

அப்போஸ்தலர் நடபடிகள் நூல், பவுல் இராயனிடத்தில்

விசாரிக்கப்படுவதற்காக சிறை வைக்கப்பட்டு காத்துக் கொண்டிருப்பதோடு, திடீரென்று நிறைவு பெறுகிறது. (அப்போஸ்தலர் நடபடிகள் 28:30-31). பவுல் நீரோ மன்னனுக்கு முன்பாக விசாரிக்கப்படுவதற்காக, இன்னமும் காவலில் வைக்கப்பட்டிருக்கையில், லூக்கா அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை எழுதியிருப்பது போல் தெரிகிறது. இதன் மூலம், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் கி.பி. 62லும், லூக்கா சுவிசேஷம் அதற்கு முன்பாக எழுதப்பட்டதையும் காட்டுகிறது (லூக்கா 1:1-4; அப்போஸ்தலர் 1:1,2). அதாவது லூக்காவும் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகமும் ஆகிய இரண்டுமே, இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை உள்ளடக்கிய முப்பது ஆண்டுகளில் எழுதப்பட்டிருக்கிறது. வரலாற்று உண்மைகளை மறைத்து, கட்டுக்கதையாக எழுதுவதற்கு, எழுதப்பட்ட, இந்த காலம் போதிய அவகாசமளிக்கவில்லை.

புதிய ஏற்பாடு ஆரம்ப காலத்தில் எழுதப்பட்டது என நம்புவதற்கு இரண்டாவது காரணம் எருசலேமில் இருந்த தேவாலயம் அழிவுண்டதற்கான குறிப்புகள் (புதிய ஏற்பாட்டில்) இல்லை. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய அனைவருமே எருசலேமிலிருக்க தேவாலயம் இடிக்கப்பட்டு போகும் என்ற இயேசுவின் முன்னுரைத்தலை பதிவு பண்ணியுள்ளனர் (மத்தேயு 24:1-2; மாற்கு 13:1-2; லூக்கா 21:5,6 ). ஜோசிபஸ் (என்னும் புதிய வரலாற்று ஆசிரியரின் ) கூற்றுப்படி ரோமர்களால் எருசலேமும், தேவாலயமும் ( கி.பி. 70-ல் ) அழிவுண்டதாகக் கூறுகிறார். இருப்பினும் இந்த பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும்



குறிப்பிடப் படவில்லை. கி.பி. 70க்குப் பிற்பாடு புதிய ஏற்பாட்டுப் புத்தகம் எதுவும் எழுதப்பட்டிருந்தால், அந்த பகுதி இயேசு கிறிஸ்துவின் முன்னுரைத்தல் படியே தேவாலயம் அழிவுண்டதன் மூலம் நிறைவேறியதாக ஏறத்தாழ நிச்சயமாக எழுதப்பட்டிருக்கக் கூடும். இருபத்தி ஏழு புத்தகங்களுமே கி.பி. 70-க்குள் எழுதி முடிக்கப்பட்டது என்பதற்கு இது வலிமையான ஒரு சாட்சியமாக இருக்கிறது.

## ஆதிக்கிறிஸ்தவர்களின் எழுத்துக்கள்

புதிய ஏற்பாடு ஆரம்பக் கட்டத்தில் எழுதப்பட்டவைகள் என்பதற்கு கூடுதல் சாட்சியமாக, ஆதிச்சபையிலிருந்த முன்னோடிகள் எழுதிய புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிளமெண்ட் என்பவர் கொரிந்து சபைக்கு ஒரு நிரூபத்தை கி.பி. 95-ல் எழுதினார். இந்த நிரூபத்தில் அவர் மத்தேயு, மாற்கு, லூக்கா, அப்போஸ்தலர் நடபடிகள், ரோமர், 1 கொரிந்தியர், எபேசியர், தீத்து, எபிரேயர் மற்றும் 1பேதுருவிலிருந்து வசனங்களை மேற்கோள் காட்டி எழுதினார்.

பிலிப்பியர்களுக்கு பாலிகார்ப் எழுதிய நிரூபம் (கி.பி. 120) மத்தேயு, மாற்கு, லூக்கா, அப்போஸ்தலர் நடபடிகள், ரோமர், 1,2 தீமோத்தேயு, எபிரேயர், 1பேதுரு, மற்றும் 1யோவானிலிருந்து மேற்கோள்காட்டி எழுதினார். ஆதி சபை முன்னோடிகள் புதிய ஏற்பாட்டிலிருந்து எல்லா வசனங்களையும் மேற்கோள் காட்டியிராவிட்டாலும், ஏழு வசனப் பகுதிகளை மேற்கோள் காட்டி எழுதியிருக்கின்றனர். இதன் மூலம் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் பரவலாக அறியப்பட்டும் மேற்கோள் காட்டி போதிக்கப்பட்டும் வந்தது என்பதை மேற்குறிப்பிட்டவை சுட்டிக் காட்டுகின்றன.

5

# கண்ணாரக் கண்ட சாட்சி

## Eye-witness Testimony

கடவுள் நம்பிக்கையில்லாதோரின் கூற்றுப்படி,புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள நிகழ்வுகளை பரிசோதித்துப் போதிய நம்பத்தகுந்த கண்ணாரக் கண்ட சாட்சிகள் எதுவுமில்லை என்கின்றனர்.

எப்படியிருப்பினும், புதிய ஏற்பாடு ஆரம்பகாலத்தில் எழுதப்பட்டது என்கிற ஆதாரத்தைக் கொண்டு, மனதைத் தொடும் சாட்சியங்களை நாம் கொண்டுள்ளோம் என்று கண்டோம். இப்படியாக, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலக் கட்டத்தில் ஏராளமான கண்ணாரக் கண்ட சாட்சியங்கள் இருந்தன.

**அப்போஸ்தலர்கள் கண்ணாரக் கண்ட சாட்சிகள்**

புதிய ஏற்பாட்டின் படி, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் இயேசுவின் வாழ்க்கை வரலாறு, அற்புதங்கள், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய எல்லாவற்றையும் கண்ணாரக் கண்ட சாட்சிகள். இயேசு சிலுவையிலே கொலை செய்யப்பட்டு சில வாரங்களே ஆகியிருந்த நிலையில், பெந்தகோஸ்தே எனும் நாளில், பேதுரு, “இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார் ; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.” என்று அறிவித்தார் (அப்போஸ்தலர் 2:32).

அந்த நாள் துவங்கி, அப்போஸ்தலர்கள் போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை பிரசங்கிங்கித்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு, யூதர்களின் உயர்நீதி மன்றத்திற்கு முன்பாக விசாரணைக்காக நிறுத்தப்பட்ட போது, நியாயாதிபதிகளிடத்தில் பேதுரு, “நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிதற்காக அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்த சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி” என்றார்கள் (அப் 5:30-32). (அப்போஸ்தலர் 3:15, 10:41யும் காண்க).

ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்குப் பிறகு, தரிசு பட்டணத்தானாகிய சவுலுக்கு இயேசு தரிசனமானார். சவுல் தமஸ்குப் பட்டணத்துக்குப் போய் அங்குள்ள கிறிஸ்தவர்களை கைது பண்ணி எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுவந்து விசாரிக்கும்படி சென்று கொண்டிருந்தார். திடீரென்று, இயேசுவைக் கண்டு, சவுல் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்துவதை நிறுத்தி இயேசுவே மேசியா என அறிவிக்கத் துவங்கினார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சவுல் கண்ணாரக் கண்ட

சாட்சி. தரிசுப் பட்டணத்தானாகிய சவுல், புறஜாதிகளுக்கு (யூதர்களல்லாத ஜனங்களுக்கு) அப்போஸ்தலனாகிய பவுலானர்.

யோவானும் கூட ஒரு கண்ணாரக் கண்ட சாட்சி. அவர், "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று எழுதினார் (1யோவான் 1:1)

**ஜனங்களின் நடுவே நடந்த பேச்சு**

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த ஜனங்கள், இன்றைய ஜனங்களைப் போலவே பெரும்பாலும் இருந்துள்ளனர். அவர்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து பேச விரும்பினார். அந்நாட்களில் அவர்களுக்கு கணினி இயந்திரம், (கம்பியூட்டர்) டிவி மற்றும் வீடியோ போன்ற சாதனங்கள் மக்கள் மனதை திசை திருப்ப இருந்ததில்லையாதலால், இன்றைக்கு நாம் பேசுவதைக் காட்டிலும் அதிகமாகவே பேசியிருக்கக் கூடும். அவர்கள் இயேசுவைப் பற்றிப் பேசினார்கள்.

**மாற்கு**

இரண்டாவது சுவிசேஷப் புத்தகமாகிய மாற்குப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் "யோவான் மாற்கு", இயேசு கெத்சமனே தோட்டத்தில் கைது செய்யப் பண்ணப்பட்டபோது, கூட இருந்த "வாலிபன்" என்று கருதப்படுகிறது. மாற்கு, " ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்துக் கொண்டு அவர் (இயேசு) பின்னே போனான்; அவனைப் பிடித்தார்கள்;" என்று எழுதினார். இங்கே குறிப்பிடப்பட்ட "வாலிபன்" மாற்றாக இருந்திருப்பானேயால், அவன் ஒரு கண்ணாரக் கண்ட சாட்சி.

ஏறத்தாழ கி.பி. 125-ல், பாபியா என்னும் கலை முன்னோடி ஒருவர், "மாற்கு எந்த தவறும் செய்யவில்லை" என்றும், பேதுரு இயேசுவைக் குறித்த ஒரு கண்ணாரக் கண்ட சாட்சியம் என எந்தவொரு "தவறான கருத்தையும்" உட்புகுத்தி எழுதியிருக்க மாட்டார்" என்று சொன்னார்.

இரேனியுவின் கூற்றுப்படி, "மாற்கு, சீமோன் பேதுரு குறித்து விளக்கமளித்தவனுமாகிய அவன், பேதுரு பிரசங்கித்தவைகளை எழுதி நமக்குக் கொடுத்திருக்கிறார்"; கி.பி. 180-ல் அவர் பேதுருவின் கண்ணாரக் கண்ட சாட்சியத்தை இரேனியு குறிப்பிட்டுள்ளார்.

**லூக்கா**

மூன்றாவது நற்செய்தி புத்தகத்தை எழுதிய ஆசிரியர் லூக்கா, இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு ஒரு கண்கண்ட சாட்சியல்ல. எப்படியிருப்பினும், அவர் மிக உயர்ந்த பண்பாற்றலைக் கொண்டிருந்த ஒரு

வரலாற்று ஆசிரியராதலால், மற்றவர்களின் கண்கண்ட சாட்சியங்களை அறிவிக்கிறார்.

**தனது சுவிசேஷ புத்தகத்தின் முகவுரையில், லூக்கா எழுதியதாவது :**

"மகா கனம் பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு, வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சாத்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" (லூக்கா 1:1-4).

லூக்கா கொடுக்கிற விவரத்திலிருந்து, இயேசுவின் பிறப்பு மற்றும் இளம்பிராய வளர்ச்சி ஆகியவை குறித்து அவரது தாய் மரியாளிடத்தில் விசாரித்து அறிந்திருக்கிறார் என்று நிச்சயமாகத் தெரிகிறது. இயேசுவின் வருகை குறித்து காபிரியேல் தூதன் அறிவிக்கும் போது, அவள் அங்கே இருந்தாள். அவள் கருத்தரிக்கையில் அங்கே இருந்தாள். இயேசு பிறந்து வைக்கோல் மீது கிடத்தப்பட்டிருந்த போதும், மேய்ப்பவர்கள் குழந்தை இயேசுவை முன்னணையில் வந்து பார்க்கிறபோதும், அவள் அங்கே இருந்தாள். இயேசு விருத்தசேதனம் பண்ணப்பட்ட போதும், எருசலேம் தேவாலயத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோதும் மரியாள் இருந்தாள். பஸ்கா பண்டிகையில் தன் குடும்பமாக சிறுவனாகிய இயேசு கலந்து கொண்டபோதும், தேவாலயத்தில் போதகமார்களோடு இயேசு கேள்விகள் கேட்கவும், பதில் சொல்லும் போதும் அவள் ஆச்சரியப்பட்டவளாய் அங்கே இருந்தாள். இயேசுவின் வாழ்வின் பெரும்பகுதி அவள் அவருடன் இருந்தாள். இவைகளுக்கு லூக்காவே கண்கண்ட சாட்சியாயிருக்கவில்லையெனினும், இயேசுவின் தாயாகிய மரியாள், இயேசுவின் சகோதரர்களாகிய யாக்கோபு, யூதா, மகதலேனா மரியாள், மற்றொரு மரியாள், சலோமி, இயேசுவோடு பயணம் பண்ணின வெறுமையாயிருந்த கல்லறையை சாட்டசியிட்ட மற்றவர்கள் ஆகிய அனைவரின் கண்கண்ட சாட்சியங்களை உண்மையாய் அவர் எழுதினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, லூக்கா, பவுல் அப்போஸ்தலனுடன் பயணம் பண்ணின "பிரியமான வைத்தியன்" லூக்கா. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், அவரது கண்கண்ட சாட்சியங்களே மிக அதிகமாக எழுதப்பட்டுள்ளன. பின் வரும் வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தன்னிலைப் பெயர் சொற்கள் அனைத்துமே அவரைக் குறிப்பிடுகின்ற, அப் 16:6-40; 20:6-38; 21:1-15; 27:1-44; மற்றும் 28:1-31. லூக்கா, பவுலுடன் இரண்டு சுவிசேஷப் பயணங்களில் சென்றவர்; ரோமாபுரிக்கு பவுலோடு கப்பல் பயணத்தில் சென்றவர்; சிறை வைக்கப்பட்டிருக்கையில் அவருக்கு பணிவிடை செய்தவர். மறுபடியும் தமஸ்குப் பட்டணத்துக்கு போய்க் கொண்டிருக்கையில் வழியிலே இயேசு தனக்கு தரிசனமானதை பவுல் சொல்லக் கேட்டவர் லூக்கா.

இரேனியு, “லூக்கா, பவுலை பின்பற்றியவர், தனது ஆசிரியரின் சுவிசேஷ பிரசங்கங்களை புத்தமாக வெளியிட்டார்” என்று எழுதுகிறார். பவுல் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு கண்ணாரக்கண்ட சாட்சி, பவுலின் கண்கண்ட அந்த சாட்சியத்தை லூக்கா எழுதினார்.

**சுவிசேஷங்கள் கட்டுக்கதைகளால் மூடப்பட்டவைகளா?**

பெரும்பாலான நிபுணர்கள் மாற்கு சுவிசேஷப் புத்தகம் 70-ம் ஆண்டுகளில் எழுதப்பட்டதாகவும், 80-ம் ஆண்டுகளில் எழுதப்பட்டதாகவும் கூறுகின்றனர். கடவுள் நம்பிக்கையற்றவர் சுவிசேஷப் புத்தகங்கள் இரண்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டதாகவும், சுவிசேஷப் புத்தகங்கள் எழுதப்பட்ட நேரத்தில், வரலாற்று உண்மைகளெல்லாம் கட்டுக்கதைகளால் மூடி மறைக்கப்பட்டிருந்தது என்கின்றனர்.

லூக்கா எழுதின புத்தகம் கி.பி. 80க்கு வெகு காலத்துக்கு முன்பாகவே எழுதப்பட்டது என நம்புவதற்கு நல்ல காரணமும் இருக்கிறது. பவுல் ரோமாபுரி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டதுடன் அப்போஸ்தலர் நடபடிகள் முடிவு பெறுகிறது. இது அப்போஸ்தலர் நடபடிகள் கி.பி. 62 வாக்கில், பவுல் விடுதலை பெற்ற நேரத்தில் எழுதப்பட்டது என ஆலோசிக்க வைக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாவது பிரபந்தம் என்பதால், இரண்டு பாகத்தில், லூக்கா சுவிசேஷம் கி.பி. 62க்கு முன்பாகவே (முதலாம் பிரபந்தம்) எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மாற்குப் புத்தகம் தான் சுவிசேஷங்களிலேயே முதலாவது எழுதப்பட்ட புத்தகம், என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. கி.பி. 30-களில் மாற்கு எழுதியிருப்பாரானால், அவருடைய புத்தகம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுந்து முப்பது வருடங்களில் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம். எழுதப்பட்ட பதிவேடுகள் சரியென எடுத்துக் கொள்வதற்கு இன்னமும் ஏராளமான சாட்சியங்கள் இருந்தன. ஆதலால், புனைக்கதைகளையும் கட்டுக்கதைகளையும் சேர்த்து உண்மையை திரித்துக் கூறியிருந்தாலும் கூட அந்த சாட்சியங்கள் போதுமானவை.

சுவிசேஷச் செய்திகளெல்லாம் எழுதப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன் வாய் மொழியாகத்தான் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தனர் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்.

**விசுவாச அறிக்கைகளும் ஆதிகால பாடல்களும்**

பவுல் தனது நிருபங்களை நற்செய்தி நூல்கள் எழுதப்படுவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்பாக, கி.பி. 40 களில் எழுதத் துவங்கினார். அவர் தமது நிருபங்கள் சிலவற்றில் பவுலால் ஒன்றுபடுத்தப்பட்ட பாடல்களும் விசவாச அறிக்கைகளும் சபையில் பயன்படுத்தப்பட்டன. இந்த பாடல்களும் அறிக்கைகளும் கவிதை நடையில் இருப்பதைக் காணலாம். இன்று பிள்ளைகள் ஓசை நயத்தோடும் பாடலோடும் கற்றுக் கொள்வது போல, ஆதிக்கிறிஸ்தவர்கள்

இதே மாதிரியான நுணுக்கங்களின் அடிப்படையில் கற்றுக் கொள்ள சத்தியத்தை மனப்பாடம் செய்தனர்.

ஆதிசபையின் மிக முக்கியமான உபதேசங்களில் சில, கிறிஸ்தவப் பாடல்கள் மூலமே வெளிப்படுத்தப்பட்டன. பவுலின் நிருபங்களில் மட்டுமே பாடல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டன. உதாரணங்கள், எபேசியர் 5:14; பிலிப்பியர் 2:6 – 11; கொலோசெயர் 1:15 – 20; மற்றும் 1 தீமோத்தேயு 3:16–ல் காணப்படுகிறது. பிலிப்பியரில் சொல்லப்படுகிற பாடலில் இயேசு கிறிஸ்து சுபாவத்தில் தேவன் என்று உறுதிப்படுத்துகிறது. கொலோசெயரில் கிறிஸ்துவை "அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்" என்று காட்டுகிறது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று. இப்படிப்பட்ட பாடல்கள் மூலம் முதல் நூற்றாண்டின் முன்பகுதியில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து என்ன எண்ணம் இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது.

**1 கொரிந்தியர் 15:3–8**

1 கொரிந்தியர் 15:3–8–ல் விசுவாச அறிக்கையின் குறிப்பிடத்தக்க முக்கியப் பகுதி பவுலால் குறிப்பிடப்படுவதைக் காணலாம். இங்கே பவுல், நுட்பமான ஒரு பதத்தைப் பயன்படுத்தியிருப்பது, ஒரு குறிப்பிட்ட அமைப்பில் வாய்மொழி பாரம்பரியத்துடன் தன்னிடத்தில் வந்ததற்கேற்ப கடந்து போனார் என்பதை குறிப்பிட்டுக் காட்டுகிறது. அவர், "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் பின்பு ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்திருக்கிறார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகால பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்".

இந்த அறிக்கையின் முதல் பகுதி (வசனம் 3-5), மனப்பாடம் பண்ண ஏதுவாக பாடல் வடிவத்தில் எழுதப்பட்டது. இரண்டாம் பகுதி (வசனங்கள் 6-8)-ல் "கேபாவை" (பேதுருவின் அராமிக் பெயர்) குறிப்பிட்டு மேலும் "பன்னிருவர்," "எழுப்பப்பட்டார்," "மூன்றாம் நாள்" போன்ற தொன்மை வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் ஆரம்ப காலத்தை விவாதிக்கிறது.

இந்த விசுவாச வாக்கியங்களை பவுல் எப்பொழுது பெற்றார்? இயேசு கி.பி.30-ல் சிலுவையில் அறையப்பட்டிருப்பாரானால், பவுலுக்கு (தரிசுப்

பட்டணத்தானாகிய சவுலுக்கு) கி.பி. 32-ல் தரிசனமானார். மூன்று நாட்களுக்குப் பிறகு, தமஸ்குவில் பவுல் அனனனியா மூலம் திருமுழுக்கு பெற்று, சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார், (அப்போஸ்தலர் 19:19-20). ஏறத்தாழ கி.பி. 35-ல், பவுல் அப்போஸ்தலர்களிடம் எருசலேமிலே தனது காலத்தைக் கழித்தார், (காலத்தியர் 1:18,19). இந்தக் காலங்களிலே, அவருக்கு சபையில் பயன்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கை கொடுக்கப்பட்டது. பவுல் ஏறத்தாழ இரண்டிலிருந்து ஐந்து வருடக் காலக்கட்டத்தில் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்ட அறிக்கையை பவுல் பெற்றுக் கொண்டார்.

**முடிவுரை**

சாட்சியங்களை நாம் பரிசோதித்ததில், உண்மையில் இயேசு என்று பெயரிடப்பட்ட ஒரு மனுஷன் இருந்தார் என்பதையும், அவர் பிரசங்கம் பண்ணி வியாதிகளை குணமாக்கி, முதல் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் இஸ்ரவேலில் மரித்தார் என்பதையும் தெளிவாகக் காணுகிறோம். அவர் உயிர்த்தெழுந்த பின் நூற்றுக்கணக்கான கண்கண்ட சாட்சியங்களும், அவரைக் கண்டார்கள், சிலர் தொட்டுக் கூடப் பார்த்தார்கள். உயிர்த்தெழுந்த கிறிஸ்து, தரிசுப் பட்டணத்தானாகிய சவுலுக்கும் தமஸ்குவுக்குப் போகிற வழியில் தரிசனமாகி, கொலைக்காரனாக இருந்தவன் அப்போஸ்தலனாகிய பவுலாக மாற்றப்பட்டார்.

புதிய ஏற்பாட்டின் பாகங்களிலிருந்து, மிகவும் ஆரம்ப கால பதிவுகளை அடையாளம் காணலாம், கட்டுக் கதைகளுக்கு போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை என்றும் அறியலாம்.

# 6

# தீர்க்கதரிசனத்திலிருந்து சாட்சியம்

## Evidence from Prophecy

இது வரைக்கும், திருமறைக்கு அப்பாற்பட்ட நம்பத்தகு சாட்சியத்தைப் பார்த்தோம்; அவை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்லகேமிலே பிறந்தார், அவர் நாசரேத்திலே வளர்க்கப்பட்டார், அவர் ஞானமிகு போதகராயும், அற்புதங்களைச் செய்கிறவராய் தம்மைச் சுற்றிலுமிருந்த அநேகரைத் தம் பக்கம் ஈர்த்தார், பொந்திய பிலாத்துவின் கரத்தினால் சிலுவையில் மரித்தார், மூன்றாம் நாளில் வேதவாக்கியங்களின்படி உயிர்ப்பிக்கப்பட்டார் என்பவைகளே!

இந்தப் பாடத்தில், மேசியாவைக் குறித்து பேசப்பட்ட சில வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து விரிவாக அவரைப் பற்றி விளக்குவோம். இந்த வேத வசனங்களெல்லாம் மேசியாத்துவ தீர்க்கதரிசனங்கள் எனப்படும்.

"மேசியா" என்னும் எபிரேயப் பதம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள்படும். அதாவது, "உண்மையான இராஜாவாக தேவனால் அபிஷேகம் பண்ணப்ட்டவர்" என்று பொருள். "கிறிஸ்து" எனும் பதம் கிரேக்கப் பொருளில் அதே அர்த்தமுடையது.

இயேசு கிறிஸ்துவினால் 300க்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தீர்க்கதரிசன நிறைவேற்றங்கள்தான், ஜஸ்டின் மார்டின் என்பவரின் ஆவியை எழுப்பிவிடப்பட்ட தீ சுடராய் அவரது ஆழமான உணர்வுகளை தூண்டக் கூடியவைகளாயிருந்தன.

பின் வரும் பத்தியில், 300க்கு மேற்பட்ட தீர்க்கதரிசனங்களில் **65** மட்டும் வரிசைபடுத்துவோம்.

ஒவ்வொரு தீர்க்கதரிசனதையும் அடுத்து, அடைப்புக் குறிகளில் முன் குறித்த பழைய ஏற்பாடு, அது நிறைவேறிய வசனங்களையும் நீங்கள் காணலாம்.

### அவரது வம்ச வரலாறு

சில மேசியாத்துவ தீர்க்க தரிசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்த சம்பந்தப்பட்ட வம்சாவளியை அடையாளப்படுத்துகின்றன. அவர் ஏவாளின் வித்தில் வந்து, சாத்தானுடைய தலையை நசுக்குவார் (ஆதியாகமம் 3:15;

கலாத்தியர் 4:4; மத்தேயு 1:20). அவர் ஆபிரகாமின் சந்ததியாயிருப்பார் (ஆதியாகமம் 22:18; மத்தேயு 1:1; கலாத்தியர் 3:16), ஈசாக்கின் சந்ததியாயும், (ஆதியாகமம் 21:12; 17:19; லூக்கா 3:23,24), யாக்கோபின் சந்ததியாயும், (ஆதியாகமம் 35:10-12; லூக்கா 3:23;24), யூதாவின் சந்ததியாயும் (ஆதியாகமம் 49:10; லூக்கா 3:23,33), ஈசாயின் சந்ததியாயும் (ஏசாயா 11:1; லூக்கா 3:23,32), தாவீதின் சந்ததியாயுமிருப்பார் (எரேமியா 23:5; 2 சாமுவேல் 7:12-16; சங்கீதம் 132:11; லூக்கா 3:23,31).

படிப்படியாக, தீர்க்கதரிசிகள் மேசியாவின் வம்சாவளியை குறிப்பிடுகிறார்கள். ஆபிரகாமுக்கு எட்டுக் குமாரர்கள் இருந்தும் ஈசாக்கின் வம்சாவளியில் மேசியா வருவார் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டது. ஈசாக்கு என்பவர்க்கு இரண்டு குமாரர்களான யாக்கோபு, ஏசா இருந்த போதிலும், யாக்கோபின் வம்சாவளியிலே மேசியா வர வேண்டியதாயிருந்தது. யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள்; ஆனாலும் யூதாவின் சந்ததியில் கிறிஸ்து வரவிருந்தார். யூதாவின் கோத்திரத்தில், ஈசாய், தாவீதின் சந்ததியில் மேசியா வருவார் என்று முன்னுரைக்கப்பட்டது.

## தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா

பிற பழைய பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள், மேசியா மோசேயைப் போன்ற தீர்க்கதரிசியாகவும் (உபாகமம் 18:18; மத்தேயு 21:11; லூக்கா 7:16; யோவான் 4:19; 6:14; 7:40), பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகவும், ( சங்கீதம் 45:7; ஏசாயா 11:2; 61:1-2; மத்தேயு 3:16; லூக்கா 4:15-21,43) குறிப்பிடப்பட்டார். மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அவர் தீர்க்க தரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் என்றென்றைக்குமிருப்பார் (சங்கீதம் 2:6; 110:4; மத்தேயு 2:6; எபிரேயர் 3:1; 5:5,6). அவர் தேவனுடைய பாடுபடும் தாசனாயிருந்து, புறஜாதிகளையும் யூதர்களைப் போல மீட்பார் எனப்பட்டது (ஏசாயா 42:1-4; மத்தேயு 12:18-21).

## அவருடைய பிறப்பைக் குறித்த சூழல்கள்

குறிப்பிட்ட காலத்தில் மேசியா வருவார் (ஆதியாகமம் 4:10; தானியேல் 9:24,25; லூக்கா 2:1). அவர் கன்னிகையினிடத்தில் பிறப்பார் (ஏசியா 7:14; மத்தேயு 1:18-25). பெத்லகேமில் பிறப்பார் (மீகா 5:2, மத்தேயு 2:1; லூக்கா 2:5,6). இராஜாக்கள் அவருக்கு வெகுமதிகளை கொண்டு வருவார்கள் (சங்கீதம் 72:10; ஏசாயா 60:6; மத்தேயு 2:1-11). கபடற்ற பிள்ளைகள் கொல்லப்படுவதால் பெத்லகேமில் அழுகையும் புலம்பலும் உண்டாயிருக்கும் (எரேமியா 31:15; மத்தேயு 2:16-18).

**அவரது ஊழியம்**

வனாந்திரத்தில் கூப்பிடுகிற முன்னோடியின் மேசியாவின் ஊழியம், "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்" எனும் சத்தத்தைத் தொடர்ந்து வரும் (ஏசாயா 40:3; மல்கியா 3:1; லூக்கா 1:17; மத்தேயு 3:1,2). அவரின் ஊழியம் கலிலேயாவில் துவங்கும் (ஏசாயா 9:1,2; மத்தேயு 4:12,16:23). அவர் உவமையில் போதிப்பார் (சங்கீதம் 78:2; மத்தேயு 13:34,35) மற்றும் அற்புதங்களை நடப்பிப்பார் (ஏசாயா 35:56; மத்தேயு 9:35; 11:4-6; யோவான் 11:47). செவிடர்கள் கேட்பார்கள், குருடர்கள் காண்பார்கள் (ஏசாயா 29:19; மத்தேயு 11:4-5). பின்னதாக அவர் கழுதையின் மேல் சவாரி செய்து, எருசலேமில் நுழைந்து இரட்சிப்பைக் கொண்டு வருவார் (சகரியா 9:9; மத்தேயு 21:1-5; லூக்கா 19:36,37). அவர் தேவாலயத்தில் பிரவேசிப்பார் (ஆகாய் 2:7-9; மல்கியா 3:1; மத்தேயு 21:12), தேவனுடைய வீட்டின் மேல் தமக்குள்ள வைராக்கியத்தை விளங்கப் பண்ணுவார் (சங்கீதம் 69:9; யோவான் 2:15-17).

**அவரது தெய்வீக இயல்பு**

மேசியா நித்தியத்திலிருந்து வருவார் (மீகா 5:2; ஏசாயா 9:6,7; 41:4; 44:6; 48:12; கொலோ செயர் 1:17; யோவான் 1:12; 8:45; 17:5,24), கர்த்தர் என்று அழைக்கப்படுவார் (சங்கீதம் 110:1; லூக்கா 2:11; 20:41-44). தேவன் நம்மோடிருக்கிறார் எனும் பொருள்படும் இம்மானுவேல் என்று அவர் அழைக்கப்படுவார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:23), அவர் நம்முடைய நியாயாதிபதியாயிருப்பார் (ஏசாயா 33:22; யோவான் 5:30).

**அவர் புறக்கணிக்கப்படுவார்**

அவர் தமது சொந்த ஜனங்களால் புறக்கணிக்கப்படுவார், (சங்கீதம் 69:8, ஏசாயா 53:3, யோவா 1:11;7:5,48). அவர் யூதருக்கு "இடறுதலுக்கு ஏதுவான கன்மலையும் தடுக்கலின் கல்லுமாயிருப்பார் (ஏசாயா 8:14; 28:16; ரோமர் 9:32), புறஜாதிகளுக்கு வெளிச்சமாயும் (ஏசாயா 60:3; அப்போஸ்தலர் 13:47-48), இருப்பார். எந்த முகாந்திரமுமின்றி பகைக்கப்பட்டு (சங்கீதம் 69:4; ஏசாயா 49:7; யோவான் 7:48; 15:25), அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுவார் (சங்கீதம் 118:22; மத்தேயு 21:42; அயாவான் 7:48), சிநேகிதனால் காட்டிக் கொடுக்கப்பட்டு (சங்கீதம் 41:9; சங்கீதம் 55:12,14; மத்தேயு 10:4 யோவான் 13:18,21), தனது சீஷர்களால் கைவிடப்பட்டு ( சகரியா 13:7; மத்தேயு 26: 31-56; மாற்கு 14:50), முப்பது வெள்ளிக்காசுக்காக் காட்டிக் கொடுக்கப்படுவார் (சகரியா 11:12; மத்தேயு

27:5-7). பொய் சாட்சிகளால் அவர் குற்றஞ்சாட்டப்படுவார் (சங்கீதம் 35:11; மத்தேயு 28:59-61). ஆகிலும் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தமது வாயைத் திறக்க மாட்டார் (ஏசியா 53:7; மத்தேயு 27:12-19). அவர் தமது முதுகிலும் முகத்திலும் அடிக்கப்படுவார் (ஏசாயா 50:6; மீகா 5:1; மத்தேயு 26:67; 27:30), முகத்திலே துப்பப்படுவார் (ஏசாயா 50:6; மத்தேயு 26:67; 27:30), பரியாசம் பண்ணப்படுவார் (சங்கீதம் 22:7,8; மத்தேயு 27:31,39-44), அடிக்கப்படுவார் (சங்கீதம் 50:6; மத்தேயு 26:67; 27:26,30). அவர் காயப்பட்டு, நொறுக்கப்பட்டிருப்பார் (ஏசாயா 53:5; மத்தேயு 27:26), தமது சிலுவையின் பாரத்தினால் கீழே விழுவார் (சங்கீதம் 109:24,25; யோவான் 19:17; லூக்கா 23:26).

### அவருடைய சிலுவை மரணம்

அவர் மரத்திலே தூக்கப்பட்டு சாபத்துக்குள்ளாவார் (உபாகமம் 21:23; 3:13). அவருடைய கைகளும் கால்களும் உருவக்குத்தப்படுவார் (சங்கீதம் 22:16; சகரியா 12:10; லூக்கா 23:33; யோவான் 19:18,37; 20:25), ஆயினும் அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை (யாத்திராகமம் 12:46; சங்கீதம் 34:20; யோவான் 19:33-36). அவர் தாகத்தால் பாடுபடுவார் (சங்கீதம் 22:15; 69:21; யோவான் 19:28), கசப்பான காடி அவருக்கு குடிக்கக் கொடுப்பார்கள், (சங்கீதம் 69:21;மத்தேயு 27:34). அவர், “என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்” என்று கதறுவார் (சங்கீதம் 22:1; மத்தேயு 27:46). தேவனிடத்தில் தம்முடைய ஆவியை ஒப்புக் கொடுப்பார் (சங்கீதம் 31:5; லூக்கா 23:46). அவருடைய விலா எலும்பில் குத்துவார்கள் (சங்கீதம் 22:14; சகரியா 12:10; யோவான் 19:34). அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார் (ஏசாய 53:12; மத்தேயு 27:38; லூக்கா 23:32-33), ஆகிலும் அநேகருடைய பாவங்களை சுமப்பார் (ஏசாயா 53:12; லூக்கா 23:34), அவருடைய நண்பர்களும் தம்மால் நேசிக்கப்பட்டவர்களும் தொலைவிலே நின்று அவரை பார்ப்பார்கள் (சங் 38:11; லூக்கா 23:49). ஜனங்கள் பரியாசம் பண்ணி தங்கள் தலைகளைத் துலுக்குவார்கள் (சங்கீதம் 22:17; லூக்கா 23:35). மத்தியான வேளையிலே அந்தகாரம் சூழ்ந்து கொள்ளும் (ஆமோஸ் 8:9; மத்தேயு 27:45). அவருடைய வஸ்திரம் பங்கிடப்பட்டு அவரது உடையின் மேல் சீட்டுப் போடுவார்கள் (சங்கீதம் 22:18; யோவான் 19:23,24).

### அவரது அடக்கமும் உயிர்த்தெழுதலும்

அவர் ஐசுவரியவனாலே அடக்கம் பண்ணப்படுவார். (ஏசாயா 53:9; மத்தேயு 27:57-60). ஆனால், அவரது சரீரம் அழிவைக் காண்பதில்லை

(சங்கீதம் 16:10; அப்போஸ்தலர் 2:31). அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார் (சங்கீதம் 2:7,16:10; அப்போஸ்தலர் 2:27-32). அவர் உன்னதத்திற்கு ஏறுவார் (சங்கீதம் 68:18; லூக்கா 24:51; அப்போஸ்தலர் 1:9), தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பார் (சங்கீதம் 110:1; எபிரேயர் 1:3), அக்கிரமக் காரருக்காக வேண்டிக் கொள்வார் (ஏசாயா 53:12; ரோமர் 8:34).

**திடீரென நடந்த ஒரு விபத்தா?**

இயேசு கிறிஸ்து நிறைவேற்றின 65 தீர்க்கதரிசனங்களை இப்பொழுது பார்த்தோம். இயேசு அவைகளை நிறைவேற்றுவதற்கு இருந்த சாதகமான சூழ்நிலை என்ன?

பீட்டர் ஸ்டோனர் என்பவர், தனது '**விஞ்ஞானம் பேசுகிறது**' எனும் புத்தகத்தில், எட்டு மேசியாத்துவ தீர்க்கதரிசனங்களைச் சுட்டிக் காட்டி, எந்த நபராலும் நிறைவேற்ற சாதகமான சூழ்நிலையை தீர்மானித்து இன்றைய உலகோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். அவர், "எந்த ஒரு மனிதனுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாலும், ... 10-ல் 1 என்ற 17வது சக்தியில் எட்டு தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றலாம்" என்றார். வழக்கத்துக்கு மாறான எட்டு தீர்க்கதரிசனங்களையும் ஒரே மனுசனால் நிறைவேற்றப்படலாம் என்பதற்கு விளக்கமளிக்கும் பொருட்டு, பின்வரும் விளக்கத்தை ஸ்டோனர் கொடுத்தார்: 17வது சக்தி வெள்ளி டாலர்களில் 10ஐ எடுத்து டெக்ஸாஸ் மாநிலத்திலும் இரண்டு அடி உயரத்தில் மூடும். பிறகு ஒரு வெள்ளி டாலரை எடுத்து மற்றவைகளோடு கலக்குங்கள். பிறகு கண்கள் கட்டப்பட்ட ஒரு மனுஷனை தான் விரும்பும் தொலைவுக்கு நடந்து, கலக்கப் பயன்படுத்திய அந்த குறிப்பிட்ட டாலரை எடுத்து வரவேண்டும் என்று சொல்லுங்கள். அந்த குறிப்பட்ட டாலரை கண்டுபிடித்து எடுத்து வருவதற்கான வாய்ப்புகள் தான் எட்டுத் தீர்க்க தரிசனங்களை தீர்க்க தரிசிகள் எழுதிய போது ஒரே மனிதனால் அந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறச் சூழ்நிலைகளும் இருந்திருக்கும்.

பிறகு, பேராசியர் ஸ்டோனரும் அவரது 600 மாணவர்களும் நாற்பத்தி எட்டு தீர்க்கதரிசனங்களை ஒருவரால் நிறைவேற்ற ஏதுவான சாத்தியக் கூறுகளை கணக்கிட்டுப் பார்த்தனர். இதற்கான சாத்தியக் கூறு, (அமெரிக்க மதிப்புப்படி) லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியில் ஒரே ஒரு வாய்ப்பு உண்டு (இதுவே ஐரோப்பிய மதிப்பில், 1க்கு அடுத்து 18 பூஜ்யங்கள்).

இந்த எண்ணின் அளவை நாம் காணத்தக்கதாக, பேராசியர் ஸ்டோனர் அணுவின் அளவை ஒப்பிடுகிறார். பத்து லட்சம் அணுக்களை ஒன்றாக்கினால்

ஒரு முடியளவு தோற்றம் பெறும். விஞ்ஞானிகளை பேட்டி கண்ட பிறகு, ஸ்டோனர் முழு அண்ட சராசரத்திலும் உள்ள அணுக்களை மதிப்பிட்டார். அவர் "பழைய ஏற்பாட்டின் நாற்பத்தியெட்டு தீர்க்கதரிசனங்களை யாரோ ஒரு தனிப்பட்ட நபரால் நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள், ஒரு நபர் குறிப்பான நோக்கம் எதுவுமின்றி, இலட்சம் கோடியே ஆயிரம் கோடியில் ஒரு வாய்ப்பு உண்டாவதற்கு சமமானது", என்றார்.

இவை நிலையற்ற வாய்ப்புகள், அல்லது சாத்தியக் கூறுகள். இருந்தும் இயேசு, இயேசு மட்டுமே, 300க்கு மேற்பட்ட மேசியாத்துவ தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார். இது ஏதோ திடீரென நடந்த ஒரு விபத்து போன்ற செயலல்ல. இந்த தீர்க்கதரிசன நிறைவேற்றங்கள், ஞானமிக்க தேவன், இயேசு கிறிஸ்து மூலமாகத் தம்மை வெளிப்படுத்தினதற்கான ஆதாரங்கள்.

இயேசு தாம் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதை அறிந்திருந்தார். தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து தமது அப்போஸ்தலரிடம் அவர், "மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே" என்றார் (லூக்கா 24:44).

# 7 யார் இந்த இயேசு?
## Who is this Jesus?

இதுவரைக்கும் நாம், ஆதி யூத மற்றும் ரோம வரலாற்று ஆசிரியர்களின் ஆதாரங்களைக் கவனித்தோம்; ஆதிக் கிறிஸ்தவர்களான இரத்த சாட்சிகளின் எழுத்துக்களை வாசித்தோம்; தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் தீர்க்கதரிசன சாட்சியங்களை பரிசீலித்தோம்; கண்ணாரக் கண்டவர்களின் சான்றுகளை கேட்டோம். இந்த சாட்சியங்கள், புதிய ஏற்பாட்டின் சார்புத் தன்மையையும், அதன் வரலாற்றுப் பதிவேடுகளையும், இயேசு கிறிஸ்து வாழ்ந்தார், அன்பு கூர்ந்தார், போதித்தார், ஊழியஞ் செய்தார், மரித்தார், முதலாம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் எனும் நம்பகத் தன்மைக்கு நம்மை வழி நடத்துகின்றன.

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன், ஒரு சிறிய பட்டணமாகிய பெத்லகேமிலே, ஒரு குழந்தை பிறந்து தீவனத்தின் தொட்டிலிலே கிடத்தப்பட்டிருந்தது. இன்று உலகத்தின் பாதிப்பேர் அவரைக் கனம் பண்ணுகிறார்கள்.

இயேசு நாசரேத்தில் வளர்ந்தார், இது கலிலேயாவிலிருந்த ஒரு பொதுவான மலைக் கிராமம். அவர் முப்பது வயது வரை (அவரைக் குறித்து வெளிலகுக்கு) தெளிவாய்த் தெரியாத வகையில் வாழ்ந்தார். பிறகு அவர், மூன்றாண்டுகள் பொதுப்படையாக ஊழியத்தைச் செய்தார். இந்த ஊழியம் தான் வரலாற்றையே மாற்றிப் போட்டது.

அவர் மிகவும் ஞானத்துடன் போதித்த ஒரு போதகர்: "அநேக ஜனங்கள் அவருடைய போதகத்தை விருப்பத்தோடேக் கேட்டார்கள்". (மாற்கு 12:37). "அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தார்" (மத்தேயு 7:28).

இயேசு தம்மைக்குறித்து அதிர்ச்சியும் திடுக்கிடுதலுமான தன் உரிமைச் செய்தியை பேசினார். அவர் மனுஷர்களைக் காட்டிலும், போதகர்களைக் காட்டிலும், தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் மேலானவர் என்பதை வலியுறுத்தினார். அவர் தெய்வீகத் தன்மையானவர் என உரிமையை எழுப்பினார்; அந்த உரிமைக் கோருதலே அவருடைய போதனைகளுக்கு அடிப்படைக் கருத்துக்களாயின.

### "மனுச குமாரன், தேவனுடைய குமாரன்"

அவருடைய (இயேசுவின்) ஆரம்பகால ஊழியநேரத்தில், நிக்கொதேமு எனும் பெயருள்ள ஒரு மனுஷன் இரவுநேரத்தில் அவரிடத்தில் வந்தான்.

நிக்கொதேமு ஒரு பரிசேயனும், யூதர்களின் அதிகாரியுமாயிருந்தான். அவன் இயேசுவினிடத்தில், "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான்" (3:1,2).

இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக; "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவான் 3:3). மீண்டும் இயேசு, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவான் 3:5).

புதிய பிறப்பு என்பது ஆவிக்குரிய பிறப்பு என்று விளக்கப்படுத்திய பின், இயேசு, "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை. சர்ப்பமானது வனந்திரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷ குமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என்றார். (யோவான் 3:13-16). பிறகு இயேசு தாம் மாத்திரமே "தேவனுடைய ஒரே பேறான குமாரன்" என்றும் சுட்டிக் காட்டினார் (3:18).

நிக்கொதேமு இயேசுவை "ரபீ" என்றழைத்தான்; அதற்கு "போதகரே" என்று பொருள். ஆனால், இயேசு புதியதோர் வழியைப் போதித்தார். "என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்பதற்குப் பதிலாக, அவர், "மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். ரபீக்களின் அதிகாரத்துக்கு விட்டுக் கொடுக்காமல் ஏவப்பட்ட பழைய ஏற்பாட்டு போதனையின் மேலும் தமக்கு இருக்கும் தெய்வீக அதிகாரத்தை உரிமையோடு காட்டுகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவர் தாம் தேவனுக்காகப் பேசுகிறார். இந்த உரிமைகோரல் புரட்சிகரமானது.

இயேசு தம்மை "மனுஷகுமாரன்" என்று குறிப்பிட்ட போது, அது உண்மையாக இருந்த போதிலும், அவர் தம்மை முற்றிலும் மனுஷன் என்று எளிமையாகக் (சாதாரணமாகக்) குறிப்பிடவில்லை. தானியேலினால் விவரிக்கப்பட்ட மேசியா தாமே என்பதையும் குறிப்பிட்டார். ஒரு தரிசனத்திலே தானியேல், "இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே

சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத கர்த்தத்துவமும், அவருடைய இராஜ்யம் நீங்காததுமாயிருக்கிறது" (தானியேல் 7:13-14).

தம்மை மனுஷகுமாரன் என்று அடையாளப்படுத்தி, இயேசு தம்மை பரலோகத்திலிருந்து வந்த மேசியா என்றும், தமது ராஜ்யத்திலே அமர்ந்து அவர் ஆளுகை செய்யும்படி தேவனிடத்தில் திரும்பவும் போவார் என்பதையும் குறிப்பிட்டார். பிறகு, தம்மை மாத்திரமே தேவனுடைய "ஒரே பேறான குமாரன்" என்று விளக்கப்படுத்தி, தம்மை தெய்வீகமானவராகக் குறிப்பிட்டார். யூதர்கள் மத்தியிலே அது அநியாயமாகக் காணப்பட்டது.

**மதத் தலைவர்களுடன் இயேசுவின் உறவுமுறை**

தமது மலைப் பிரசங்கத்தில், இயேசு மறுபடியும் மறுபடியும், "உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்... நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சொன்னார் (மத்தேயு (5:21,22,27,28, 31-32, 39-40, 42-43). யூத மத போதகர்களின் பாரம்பரிய உபதேசங்களான கடந்த கால நிகழ்கால போதனைகளை அவர் சவால்விட்டார்.

ஒரு நிகழ்ச்சியின் போது இயேசு "வாய்க்குள் போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்" (மத்தேயு 5:11). இங்கே, இயேசு அசுத்தமானதும் அசுத்தமில்லாததுமான உணவுகளைக் குறித்த பழைய ஏற்பாட்டு வசனப் பகுதியை எடுத்து வைக்கிறார். பழைய ஏற்பாட்டு வசனங்களையெல்லாம் தள்ளிவைத்து தமது சுயபோதனைகளாகிய "புதிய உடன்படிக்கையால்" அவ்விடங்களை நிரப்பும் இந்த நபர், எப்படிப்பட்ட அதிகாரமுடையவராயிருக்க முடியும்?

**"தேவனுடைய விரல்களால்"**

ஒரு நாள், இயேசு ஒரு ஊமையனைப் பிடித்திருந்த பிசாசை விரட்டி, அவனை மீட்டு பேசவைத்தார். ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் அவர்களில் சிலர், "இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல் செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்", (லூக்கா 11:15). அங்கே அற்புத கிரியை நடப்பிக்கப்பட்டதை அவர்களால் மறுக்க இயலவில்லை; எனவே, அது சாத்தானின் வல்லமையினால் நடப்பிக்கப்பட்டது என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இயேசு பிரதியுத்திரமாக, "சாத்தான் தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால், அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் தேவனுடைய விரல்களினால் பிசாசுகளைத்துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" என்றார் (லூக்கா 11:18,20). இயேசு தேவனுடைய விரலைப் பயன்படுத்துகிறார் என்பது தெளிவாய்க் காணப்படுகிறது. தேவனுடைய

பெலத்தால் அவர் செயல்பட்டுக் கொண்டிருந்தார். சாத்தான் மீது தமக்கிருந்த வல்லமையே தேவனுடைய ஆளுகை துவங்கி விட்டதற்கான அடையாளம் என்று அறிவித்தார்.

**பிதாவுக்கும் குமாரனுக்குமிடையேயான உறவை புரிந்து கொள்ளுதல்**

தமது கலிலேயா ஊழியத்தின் போது இயேசு, "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்" (மத்தேயு 11:27).

இயேசு தம்மைக் குறித்து தாம் அறிந்து கொண்டதாக இந்த வார்த்தை நமக்குச் சொல்லுவது என்ன? தம்மைத் தேவனுடைய ஒப்பற்ற குமாரன் என்றும், தாமே மனுக்குலத்துக்கு அவரை வெளிப்படுத்துபவர் என்றும் அறிவித்தார்.

**"அப்பா, பிதா"**

தேவனை நோக்கி கூப்பிடும் போது, இயேசு, "அப்பா" என்னும் அராமிக் வார்த்தையை பயன்படுத்தினார்; குமாரனுக்கும் பிதாவுக்குமிடையேயான நெருக்கமான நட்புறவை, தனிப்பட்ட ரீதியிலான அந்நியோந்யத்தை குறிப்பிடும் பதம் இது. இந்தப் பதம் அன்பின் நெருக்கத்தை வெளிப்படுத்தும் சொல்.

புதிய ஏற்பாட்டு நாட்களில் யூதர்கள் தேவனுடைய நாமத்தை மிகவும் உச்சக்கட்ட ஸ்தானத்தில் வைத்து, அந்த நாமத்தை தங்களுடைய அசுத்த, உதடுகளால் உச்சரித்தாலே அவரது தெய்வீகத்தன்மைக்கு இழுக்கை கொண்டுவந்தது போலாகிவிடும் என்று பயந்தனர். ஆனால், இயேசு தேவனை அப்பா என்று அழைத்ததுமன்றி, தமது சீஷர்களும் அப்படியே அழைக்கும்படி போதித்தார். அவர் தேவனிடத்தில் நெருக்கமான நட்பு உறவைக் கொண்டிருந்தது மட்டுமின்றி, நாமும் அவரிடத்தில் நெருக்கமான நட்புறவை அனுபவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை உண்டுபண்ணினார். தாமே தேவனுக்குப் பிரியமான குமாரன் என்பது இயேசுவுக்கத் தெரியும்; ஆதலால் தேவனிடத்தில் நெருக்கமான வார்த்தைகளால் ஜெபித்தார்.

**"தேவனுக்கு சமமானவர்"**

ஒரு ஓய்வு நாளில் எருசலேமில், முப்பத்தியெட்டு வருஷமாய் வியாதிப்பட்டிருந்த ஒரு மனுஷனை இயேசு, பெதஸ்தா குளத்தருகில் சொஸ்தப்படுத்தினார். ஓய்வு நாளில் சொஸ்தமாக்கினதனிமித்தம் யூதர்கள் அவரை குற்றப்படுத்தினார்கள்; இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார்; நானும் கிரியை செய்து வருகிறேன்" என்றார் (யோவான் 5:37).

இது யூதர்களை மிகவும் சினங்கொள்ள வைத்தது. அவரைக் கொலை செய்ய வகை தேடினர்; அவர் ஓய்வுநாளை மீறினதுமன்றி, "தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்று சொல்லி தம்மைத் தேவனுக்கு சமமாக்கினபடியானாலே" யூதர்கள் அப்படிச் செய்தனர் (யோவான் 5:18).

**"நீ மனுஷனாயிருந்து கொண்டு, தேவன் என்று உரிமை கொண்டாடுகிறாய்"**

பிரதிஷ்டை பண்டிகையின்போது, யூதர்கள் இயேசுவைச் சூழ்ந்து கொண்டு: "எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்கு சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள்" (யோவான் 10:24).

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செல்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது. ஆனாலும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள். என் ஆடுகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்." (யோவான் 10:25-30).

யூதர்கள் இதைக் கேட்ட போது, அவர்மீது கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள், ஆனால், "இயேசு அவர்களை நோக்கி; நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்; அவைகளில் எந்தக் கிரியை மித்தம் என் மீது கல்லெறிகிறீர்கள்? என்றார்" (யோவான் 10:32). "யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியைகளினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை. நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று" சொல்லுவதால் தான் என்றனர் (8:33).

இயேசு தம்மைத் தேவனுக்கு சமமாகக் குறிப்பிடுவதாக (அவர்கள்) யூதர்கள் புரிந்து கொண்டார்கள்.

**பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்**

இயேசு தங்கியிருந்த கப்பர் நகூமிலிருந்த வீட்டல் ஒரு பெரிய கூட்டம் கூடியது. "உடனே வாசலுக்கு முன்னும் இடம் போதாதபடிக்கு அநேகர் கூடி

வந்தார்கள்; அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்" (மாற்கு 2:1-2). அப்பொழுது திமிர்வாதமுள்ள ஒரு மனுஷனை நான்குபேர் சுமந்து கொண்டு அவரிடத்தில் வந்தார்கள்; ஜனக் கூட்டத்தினமித்தம் அவருக்குச் சமீபமாய் சேரக்கூடாமற் போயிற்று. எனவே வீட்டின் மேற்கூரையில் ஓட்டைபிரித்து திமிர்வாதக்காரனை படுக்கையுடன் உள்ளே இறக்கினார்கள். அவர்களுடைய விசுவாசத்தை இயேசு கண்டபோது, "திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார் (மாற்கு 2:5).

அங்கே உட்கார்ந்திருந்த நியாயப்பிரமாணப் போதகர்களில் சிலர், "இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்துக் கொண்டிருந்தார்கள்" (2:7).

அவர்கள் இப்படிச் சிந்தனை செய்கிறதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி: "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லுவதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று சொல்லுவதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக் காரனை நோக்கி: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, 'உன் வீட்டுக்குப் போ என்று உனக்கு சொல்லுகிறேன்' என்றார்."

திமிர்வாதக்காரன் உடனே எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். ஆச்சரியப்பட்ட ஜனங்கள், தேவனை மகிமைப்படுத்தி, "நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்றுச் சொன்னார்கள், (மாற்கு 2:12). மனுஷருடைய பாவங்களை மன்னிப்பதன் மூலம், இயேசு தம்மை தேவனாக குறிப்பிட்டார். அவரைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் சொன்னதும் சரிதான். தேவன் மட்டுமே பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார். ஒரு அற்புதத்தைச் செய்ததன் மூலம், இயேசுத் தம்மை தேவனாக தேவனுடைய குமாரனாக மாமிசத்தில் வெளிப்பட்டார்.

**சனகெரிப் சங்கத்துக்கு முன்பாக இயேசுவின் சாட்சியம் :**

ஆலோசனை சங்கத்துக்கு முன்பாக விசாரிக்கப்படும்படி இயேசு கொண்டுபோய் நிறுத்தப் பட்டபோது, பிரதான ஆசாரியன் அவரைப் பார்த்து, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்" (மத்தேயு 26:63). அதற்கு இயேசு, "நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷ குமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இது முதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 26:64).

"அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்து கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதுஐ என்ன?" என்றான். (மத்தேயு 26:65).

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னபோது, யூதர்களின் தலைவர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள். தாம் தேவனுடைய தன்மையை பகிர்ந்து கொண்ட தெய்வீகமானவர் என்று குறிப்பிட்டார். அவர் குமாரனாகிய தேவன்.

**"நானே"**

இயேசுவின் வெளிப்படையான உரிமை பேச்சு, தேவனுடைய நாமத்தைத் தாம் பயன்படுத்தி, "நானே" அவர் என்று குறிப்பிட்டதன் மூலம், அவரது தெய்வீகம் விளங்கப்பண்ணப்பட்டது. எரிந்து கொண்டிருந்த முட்செடியில் தேவன் மோசேயிக்கு தரிசனங்கொடுத்து, எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து, இஸ்ரவேலரை விடுதலையாக்கி நடத்திக் கொண்டு போகும்படி கட்டளை கொடுத்தபோது, மோசே, "நான் இஸ்ரவேலரிடத்திற்குப் போய், அவர்களிடம், "உங்கள் பிதாக்களின் தேவனாக என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று சொல்லும்போது, அவர்கள் என்னிடத்தில், "அவருடைய நாமம் என்ன?" என்று அவர்கள் கேட்பார்களே யாகில், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்?" என்று கேட்டார்.

தேவன் மோசேயினிடத்தில், நீ இஸ்ரவேலரிடத்தில் இதைத்தான் சொல்லவேண்டும். "இருக்கிறேன்" என்பவர் என்னை உங்களிடத்தில் அனுப்பினார்... கர்த்தர் (யேகோவா) என்பது எனது நாமம், தலை தலைமுறைக்கும் இதுவே என் நாமம் (3:13-15) என்றார்.

"யாவே" எனும் எபிரேய வார்த்தைக்கு, "இருக்கிறவராகவே இருக்கிறார்" என்பதாகும். தேவனுடைய நாமம் அவரை நித்தியமானவர் என்றும், தாமாக நிகழ் காலங்களிலும் வருங்காலங்களிலும் எப்பொழுதும் தமது ஜனங்களோடு இருக்கிறவர் என்றும் அடையாளப்படுத்துகிறது.

இந்த நாமத்தைத்தான் எருசலேமிலுள்ள தேவாலயத்திலே இருக்கும்போது இயேசு தமக்குத்தாமே அறிவித்தார். அவர் யூதர்களிடத்தில்,

"....நானே அவர் என்று விசுவாசியாவிட்டால், நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று இயேசு யூதர்களிடம் சொன்னார் (யோவான் 8:24). "நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு (சிலுவையிலறைந்த பின்பு), நானே அவரென்று .... அறிவீர்கள் (யோவான் 8:28).

பின்பு, இயேசு அவர்களை நோக்கி : "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாட்களைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களி கூர்ந்தான் என்றார்" (யோவான் 8:56).

யூதர்கள் அவரை நோக்கி: "உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே; நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்" (8:57).

அதற்கு இயேசு, "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே ... சொல்லுகிறேன் என்றார்" (8:58).

அப்பொழுது, அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு (அவர்களுடைய கண்களுக்கு) மறைந்து தேவாலயத்தை விட்டுப் போனார்.

இயேசு தமது தெய்வீக தன்மையை உரிமை கோரிக்கையாக வைப்பதோடல்லாமல், அவைகளைத் திரும்ப பெறவும் செய்தார் என்பதில் நாம் கவனம் செலுத்துவோம். யார் வேண்டுமானாலும் அவரைப் போல தனது உரிமையை வெளிப்படுத்தலாம். ஆனால், வேறு ஒருவரும் அதைத் திரும்பப் பெறமாட்டார்கள்.

இயேசு சொன்னார், "ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் "(யோவான் 6:35). இயேசு 5000 பேரை ஐந்து வாற் கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு போஷித்த பின், மீதியான துணிக்கைகளையும் எடுத்து வைத்த பின் இந்த வார்த்தைகளைச் சொன்னார், (யோவன் 6:1-13).

இயேசு சொன்னார், "நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 8:12). "பகற்காலமிருக்கும் மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவரும் கிரியைச் செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது. நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்" (யோவான் 9:4-5).

இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அந்த சேற்றைக் குருடனுடைய கண்களில் பூசி சொஸ்தமாக்கினார் (யோவான் 9:6-8).

''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்" என்றும் இயேசு சொன்னார் (யோவான் 11:25-26). இவைகளைச் சொன்னபின்பு இயேசு: "லாசருவே, வெளியே வா" என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார் (யோவான் 11:43). அப்பொழுது மரித்தவன் கல்லறையை விட்டு வெளியே வந்தான்; அவன் கால்களும் கைகளும் பிரேத சீலைகளால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி இவனைக்

கட்டவிழ்த்து விடுங்கள் என்று சொல்லி, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று விளக்கப்படுத்தினார்.

மேலும், இயேசு, "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்," என்றார் (யோவான் 10:11,17,18). இவைகளைச் சொல்லி அதிக நாட்களுக்குப் பின்பு, இயேசு சிலுவைக்குப் போய் மனமுவந்து தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தார்.

**சாராம்ஸம் [சுருக்கம்]**

இயேசு அடையாளமிடத்தக்க இக்கட்டுகளை அனுபவிக்கவில்லை. அவர் மட்டுமே ஒப்புவமையற்ற தேவனுடைய குமாரன் என்று அவருக்குத் தெரியும். பாவத்திலிருந்து ஜனங்களை விடுதலை செய்யும்படி தேவன் தம்மை அனுப்பினதை அவர் அறிந்திருந்தார். (யோவான் 8:31,32,34,36).

தேவன் தம்மிலே கிரியை செய்வதை இயேசு அறிந்திருந்தார். இயேசு பேசும்போது, தேவன் சொன்ன வார்த்தைகளையே பேசினார். அவர் செயல்பட்ட போதெல்லாம், தேவன் அதை செயல்படுத்தினார்.

**முடிவுரை :**

யோவான் தமது சுவிசேஷப் புத்தகத்தின் முகவுரையில், "ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று எழுதியதில் ஆச்சரியமில்லை (யோவான் 1:1-2). "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் ; அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஒப்பான மகிமையாகவே இருந்தது." (யோவான் 1:14).

"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்." (யோவான் 1:18). கிறிஸ்துவைக் குறித்து, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன் (மத்தேயு 22:42).

8

# கிறிஸ்து மரித்து மறுபடியும் உயிரோடு எழுந்தாரா?

## Did Jesus Die and Rise Again?

தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பது என்பது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உள்ளடக்கிய அற்புதங்களின் சாத்தியக்கூறுகளை விசுவாசிப்பதாகும். தேவன் இருப்பது உண்மையானால், அவர் அண்ட சராசரங்களையும் சிருஷ்டித்தது உண்மையானால், அண்டசராசரங்களும் இயற்கை விதிகளால் கட்டுப்படுத்தப்படுவது உண்மையானால், ஜீவன்களை அவர் சிருஷ்டித்தது உண்மையானால், அவர் மரித்தோரை எழுப்புவதும் தர்க்கரீதியான உண்மை. மரித்த ஒரு மனிதனை உயிரோடு மீட்பது அண்டசராசரங்களின் சிருஷ்டிப்புக்கு ஒப்பிட எதுவுமில்லை. ஒரு உயிரை சிருஷ்டிப்பதைக் காட்டிலும், ஒருவருக்கு உயிர் கொடுப்பது கடினமான செயலல்ல என்பதை முதலாவது உணர வேண்டும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய முழுமையான வல்லமையின் மகத்துவம், ஜீவனின் மேலும் மரணத்தின் மேலும் இருப்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்து விளக்கமளிக்க எண்ணிக்கையற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறை நம்பிக்கையற்றவர்கள் இந்த பாடத்தை மனம் திறக்கப்படாத நிலையில் அணுகினார்கள்; அற்புதங்கள் நடக்க சாத்தியக் கூறுகள் கிடையாது என்று முன்கூட்டியே தீர்மானித்தார்கள்; தங்களின் முரண்பாடான கருத்துக்களினிமித்தம், கொடுக்கப்பட்ட சாட்சியங்களையும் புறக்கணித்தனர். சிலர், இயேசுவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தைத் திருடி, பிறகு அவர் உயிரோடிருப்பதைப் போல கிடத்தி வைத்தனர் என்கிறார்கள். சிலர், இயேசு மயக்க முற்றிருந்த நிலையில் இருக்கும் போது அடக்கம் பண்ணப்பட்டார், கல்லறையின் குளுமையால் மறுபடியும் அவர் உயிர்ப்பிக்கப்பட்டார், என்று நம்புகின்றனர். வேறு சிலர், அப்போஸ்தலர்கள் அப்படியொரு முறையில் பார்த்தார்கள் - அவர்கள் பிரம்மையில் இருந்தார்கள் என்கின்றனர். இன்னும் சிலர், இயேசு சிலுவைக்குத் தப்பி இந்தியாவுக்குப் போனார், எனவே அவரைப் போன்ற சாயலில் இருந்த ஒருவரையே சிலுவையில் அறைந்து கொன்றார்கள் என்கின்றனர்.

இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததை விசுவாசியாதவர்கள் திருமறை பதிவுகளை மட்டப்படுத்த எந்தவித அளவுக்கும் போவார்கள். ஆகிலும் உண்மையாக சத்தியத்தைத் தேடுவோரை சாட்சியங்கள் எங்கே நடத்துகிறது?

## இயேசுவின் மரணத்துக்கான சாட்சியம்

இயேசு சிலுவையில் மரித்தார் என விசுவாசிப்பதற்கான நான்கு காரணங்கள். முதலாவதாக, புதிய ஏற்பாட்டின்படி, இயேசு தாமே சிலுவையில் அவர் அறையப்பட்டு மரிப்பார் என முன்னுரைத்தார். பிலிப்புச் செசரியாவில், தமது அப்போஸ்தலர்களிடத்தில், "மேலும் மனுஷகுமாரன் பலபாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார்" (லூக்கா 9:22).

பிறகு, இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் சற்று அப்புறமாய் அழைத்துக் கொண்டு போய், "இதோ எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேத பாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பார்கள். அவர்கள் அவரை பரியாசம் பண்ணி, வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்" (மாற்கு 10:33,34)

இரண்டாவதாக, புதிய ஏற்பாடு இயேசவின் சிலுவை மரணம் குறித்து விரிவான விளக்கமளிக்கிறது. லூக்கா, "கபால ஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்த பொழுது, அங்கே அவரையும், அவருடைய வலது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்" (லூக்கா 23:33). அன்று பின்பகல் மூன்று மணிக்கு, "இயேசு மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டு, 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று சொல்லி தமது ஜீவனை விட்டார்" (லூக்கா 23:46) (மத் 27:35-50யும் காண்க).

மூன்றாவதாக, இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கும் மரித்ததற்கும் சாட்சிகள் இருந்தன. "நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்றார்கள். மேலும், இயேசுவுக்கு ஊழியஞ் செய்யும்படி வந்திருந்த அநேகஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்'' (மத்தேயு 27:54-56). இயேசுவின் தாயும் அங்கே இருந்தார். "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன்மகன் என்றார், பின்பு

அந்த சீஷனை நோக்கி: அதோ உன் தாய் என்றார்" (யோவான் 19:26,27).

நான்காவதாக, வரலாற்று குறிப்பேடுகள் இயேசுவின் சிலுவை மரணத்துக்கு சாட்சியிடுகின்றன. பாபிலோனின் சட்டத் தொகுப்பில், ஆலோசனை 43A வில், "பஸ்காபண்டிகை நாளில் இயேசு தூக்கிலிடப் பட்டார் (யூதர்களின் வார்த்தையில் "சிலுவையில் அறையப்பட்டார்") என்று சொல்லப்படுகிறது; ரோம வரலாற்று ஆசிரியர், கொர்நெலியு டாஸிடஸ், எழுதும் போது, தனது அனல்ஸ் (ஒரு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளில்) 15:44-ல், "கிறிஸ்தஸ் (கிறிஸ்து) பொந்தியுபிலாத்து எனும் அதிபதியின் கைகளால் தண்டிக்கப்பட்டார்" என்று எழுதினார். மற்றொரு வரலாற்று ஆசிரியர் சமோஸ்ட்டாவைச் சேர்ந்த லூஸிடஸ் எழுதுகையில் கிறிஸ்து, "பலஸ்தீனாவில் சிலுவையில் அறையப்பட்ட மனுஷன்" என்று எழுதினார். கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதில் எந்த சந்தேகத்துக்கும் இடமில்லை.

**இயேசுவின் உயிர்த்தெழுதலாகிய சாட்சியம்**

ஒரு இக்கட்டான கேள்வி என்னவெனில், "இயேசு மரித்து மூன்று நாட்களுக்குப் பிறகு உயிரோடு எழுந்தாரா?" இயேசு மதிர்தோரிலிருந்து தேவனால் எழுப்பப்பட்டார் என விசுவாசிப்பதற்கான மூன்று காரணங்கள்: (1) வெறுமையாக்கப்பட்ட கல்லறை (2) உயிர்த்தெழுதலுக்குப் பிறகு கொடுக்கப்பட்ட தோற்றங்கள் (3) கிறிஸ்தவத்தின் பிறப்பு

**★ வெறுமையாக்கப்பட்ட கல்லறை**

சாட்சியங்களை ஆய்வு செய்ததன் பேரில், அநேக புதிய ஏற்பாட்டு வல்லுனர்களால் வெறுமையாக்கப்பட்ட கல்லறை ஒரு வரலாற்று மதிப்புமிக்கதாக கருதப்படுகிறது. இந்தக் கண்ணோட்ட மாற்றத்திற்கு அநேக காரணங்கள் உண்டு.

(1) வெற்றுக் கல்லறையில்லாதிருந்தால், அப்போஸ்தலர்கள் இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பபட்டார் என்பதை விசுவாசித்திருக்க மாட்டார்கள். முதல் நூற்றாண்டு யூதர்கள் சரீர உயிர்த்தெழுதல் நடைபெறாமல் இருந்திருந்தால், ஆவிக்குரிய மாம்ச உயிர்த்தெழுதலை நினைத்துக் கூடப் பார்க்க இயலவில்லை.

(2) அப்போஸ்தலர்கள் அப்படியொரு கதையை (கற்பனையாக) உருவாக்கியிருந்தாலும் அவர் சொன்னவற்றை யாரும் விசுவாசித்திருக்க மாட்டார்கள். அவரது சரீரம் அங்கே இல்லாதிருந்தால், அப்போஸ்தலர்கள் யூதர்களை இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்று உணர்வடையச் செய்திருக்க முடியாது.

(3) கல்லறை வெறுமையாக இல்லாதிருக்குமேயாகில், யூத அதிகாரிகள் அவரது சரீரத்தை கொண்டு வந்து நேரில் வைத்து அப்போஸ்தலர்கள்

பொய்யான தகவல்களை (உயிர்த்தலை) போதிக்கிறார்கள் என நிரூபித்திருக்கலாம். இயேசு அடக்கம் பண்ணப்பட்ட கல்லறைத் தோட்டத்தை யூதர்களும் அறிந்திருந்தார்கள்; அவரைப் பின்பற்றினோரும் அறிந்திருந்தனர். இயேசுவின் சரீரம் அங்கே இருந்திருக்குமானால் பிரதான ஆசாரியர்கள் சரீரத்தை கைப்பற்றுவதற்கு மிகவும் எளிதாயிருந்திருக்கும்; ஆனால் கைப்பற்ற இயலவில்லை. மாறாக, சரீரம் அங்கே இல்லாதிருந்தமைக்குக் காரணம் அவரைப் பின்பற்றினவர்கள் காவலர்கள் நித்திரையாயிருக்கையில் களவாகக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லத் துணிந்தார்கள்.

(4) வெறுமையான கல்லறையைக் குறித்து பவுல் வரலாற்றுச்சம்பவ ரீதியிலான சாட்சியத்தைக் கொடுக்கிறார். 1 கொரிந்தியர் 15:3-8-ல் வெறுமையான கல்லறை குறித்து அநேக காரியங்கள் சாட்சியமாக இருப்பதை ஆதிக்கிறிஸ்தவர்களின் அறிக்கைகளோடு பவுல் சுட்டிக் காட்டுகிறார். ஆரம்ப கால யூதக் கிறிஸ்தவர்களுக்கு, "அவர் உயிர்த்தெழுந்தார்" எனும் சொற்றொடர், அவரது சரீரம் உயிர்த்தெழுந்ததையே பொருட்படுத்தும். உயிர்த்தெழுந்ததை யாரும் நேரில் கண்ட சாட்சியாயிராதபடியினால், அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என எப்படி நாள் கணக்கு குறிப்பிட முடியுமா? அந்த நாளிலே தான் ஸ்திரீகள் வெறுமையான கல்லறையைக் கண்டார்கள் என்பது தெளிவு.

(5) ஸ்திரீகள் வெறுங் கல்லறையை கண்டுபிடித்தனர் என்பது புதிய ஏற்பாட்டுக்கு நம்பத்தகுந்த ஆதாரமாக இருக்கிறது. அந்த நேரத்தில், யூதப் பெண்மணிகள் சமுதாய ஏணியின் கீழ் மட்டத்தில் இருந்தனர், ஆதலால் அவர்களுடைய சாட்சியங்கள் சட்ட விசாரணைக் கூடாரத்தில் ஒன்றுக்கும் உதவாதவைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. பெண்களைக் காட்டிலும், ஆண்களால் சொல்லப்படும் கட்டுக்கதைகள் கூட, பிரதான சாட்சியங்களாக வெறுங்கல்லறையைக் குறித்த விஷயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

### ★ உயிர்த்தெழுதலுக்குப் பின் கொடுக்கப்பட்டத் தோற்றங்கள்

நாம் முதலாவது பாடத்தில் கற்றுக் கொண்டபடி, 1 கொரிந்தியர் 15:3-8ல் பவுல் மேற்கோள் காட்டி குறிப்பிடுபவை, அவருக்குக் கொடுக்கப்பட்டத் தகவல்கள், அநேகமாக அப்போஸ்தலர்களால், இயேசு மரித்த ஐந்து வருடங்களுக்குள் நடந்தவைகளைச் சொல்லி தகவல் அளித்திருக்கலாம். உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர் தோற்றமளித்த சம்பவங்கள், இந்த கிரமமாய்க்காட்டப்பட்டுள்ள வரிசையில் கட்டுக்கதையாக காண இயலாது. பவுல், உயிர்த்தெழுந்த கிறிஸ்து முதலாவது பேதுருவுக்கும், பிறகு பன்னிருவருக்கும், 500பேருக்கு ஒரே நேரத்திலும், தரிசனமானார், அவர்களில் அநேகர் அந்நாள் வரை உயிரோடிருந்திருக்கிறார்கள், பிறகு யாக்கோபுக்கும், மறுபடியும் பன்னிருவருக்கும் தரிசனமானார் என்பதை தெளவுபடுத்தினார். இந்த புராதன அறிக்கையை எவ்வளவுக்கதிகமான வேத நிபுணர்கள் கற்றவர்களோ

அவ்வளவுக்கதிகமாய் உணர்வடைந்து அவைகள் நம்பத்தகுந்த வரலாற்று அடிப்படையிலான அறிக்கைகள் எனக் கண்டனர்.

சில மக்கள் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து அளித்த தோற்றங்களெல்லாம் கட்டுக் கதைகள் என்று சொல்லுவதிலே உறுதியாய் இருந்தனர். இருந்தும், பிரதான வரலாற்று ஆசிரியர்கள் ஆழமான மையக்கருத்தைக் கொண்டு வரலாற்று உண்மைகளை மறைக்க இரண்டு தலைமுறையால் ஒன்று கூட்ட முற்படும் கட்டுக் கதைகள் கூட போதுமானதாயிராது என்று விளக்கமளிக்கப்பட்டது. கண்ணாரக் கண்ட சாட்சிகளால் அவர்களுடைய வாழ்நாள் காலத்திற்குள்ளாக சுவிசேஷங்களும் நிரூபங்களும் எழுதப்பட்டன; அவர்கள் எந்த தவறுகளையும் எதிர் கொள்வோராயிருந்தனர்.

**கிறிஸ்தவத்தின் பிறப்பு**

தெய்வ நம்பிக்கையற்றவர்கள் கூட இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்ததை அவருடைய சீஷர்கள் விசுவாசித்தார்கள் என்று ஒத்துக் கொள்கின்றனர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அப்போஸ்தலர்கள் விசுவாசியாமல் இருந்திருந்தால், கிறிஸ்தவமே தோன்றியிராது.

கேள்வி என்னவெனில், "ஆதிக் கிறிஸ்தவர்கள் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று ஏன் விசுவாசித்தார்கள்? தங்களுடைய விசுவாசத்தின் துவக்கத்தை ஒருவர் எப்படி விளக்கிச் சொல்லக் கூடும்? கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்கிற அவர்களுடைய விசுவாசம், கிறிஸ்தவத்திற்கு இருக்கும் செல்வாக்கின் விளைவால் வந்ததா? இல்லை ! பெந்தகோஸ்தே நாளில் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை அப்போஸ்தலர்கள் அறிவிக்கும் வரை கிறிஸ்தவம் தோன்றவில்லை . (அப்போஸ்தலர் 2).

யூத மத செல்வாக்கினால் அவர்களின் விசுவாசம் வந்ததா? இல்லை ! நியாயத்தீர்ப்பு நாளாகிய கடைசி நாளில் உயிர்த்தெழுதல் உண்டு என்று யூதர்கள் விசுவாசித்தனர் (எசேக்கியேல் 37; ஏசாயா 26:19; தானியேல் 12:2). பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், கிறிஸ்து பூமியில் இருந்த நாட்களிலும் உயிரோடு எழுப்பப்பட்டவர்கள் உண்டு; ஆகிலும் அவர்கள் மறுபடியும் மரித்தார்கள். நீதியுடன் கூடிய மரணம் அடைந்தோர் நித்திய ஜீவனுக்கென்று உயிர்ப்பிக்கப்பட்டு முடிவு காலங்களில் மகிமையடைவார்கள் என்று யூதர்கள் நம்பினார்களேயன்றி, மனித வாழ்நாள் வரலாற்றில் உயிர்ப்பிக்கப்படுவதை அவர்கள் விசுவாசிக்கவில்லை. ஆகையால், ஆதி சீடர்கள் யூதர்களின் கட்டுபாட்டின் (தாக்கம்) நிமித்தமே கிறிஸ்துவின் உயிர்தெழுதலை விசுவாசித்தனர் என்பது நியாயமற்றது.

ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்க வைக்க ஒரே காரணியாய் இருந்தது, கிறிஸ்து உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார்,

நாற்பது நாளளவும் அவர்களுக்கு அவர் உண்மையிலேயே தரிசனமானார் என்பவைகளே என்று தெளிவாகக் காணப்படுகிறது. இயேசு உண்மையிலேயே மரித்தோரிலிருந்து எழுந்ததை மறுதலிப்போர், கிறிஸ்தவத்தின் பிறப்பையும் துரித வளர்ச்சியையும் குறித்து எப்படி விளக்கம் கொடுப்பார்கள்? கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாவிடில், சபையின் துவக்கத்தின் மேல் ஆதாரத்தை தர்க்கிப்பில்லாமல் விளங்கப்பண்ண முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அப்போஸ்தலர்கள் நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களும், எதைப் போதித்தார்களோ அதை முறையாய் பயன்படுத்தக் கூடியவர்களுமாய் இருந்துள்ளனர். அவர்கள் நடந்ததையைக் காணும் போது, உயிர்த்தெழுதலைக் குறித்து பொய் சொல்லியிருக்க முடியாது.

இன்னும் அதிகமாக, மருத்துவ நிபுணர்கள் கூறுவது என்னவெனில், ஒழுக்கங்கெட்டவர்களால் வாரினால் அடித்துத் தாக்கும் நிலையை ஏற்றுக் கொண்டு இயேசு தாக்குப் பிடித்திருப்பதற்கு எந்த வழியும் இல்லை; மேலும் இரக்கமற்று சிலுவையில் அறையப்படுவதையும், ஈட்டியால் அவரது இருதயத்தில் குத்தப் படுவதையும் அவரால் தாக்குப் பிடித்திருக்க இயலாது. கல்லறை குழுமையில் அவர் உயிர்த்தெழுந்து வருவதற்கு ஏதுவான அளவுக்கு, அவர் உயிரோடே அடக்கம் பண்ணப்பட்டிருக்க இயலாது என்கின்றனர்.

மேலும், மனோ தத்துவ நிபுணர்கள் கூறுவது, மனத் தோற்றத்தின் அடிப்படையில் உயிர்த்தெழுதல் வரலாறை விளக்கிச் சொல்ல முடியாது. அநேக ஜனங்கள் ஒரே மாதிரியான வரலாறை பிரம்மையின் அடிப்படையில் சொல்ல இயலாது.

வெறுங்கல்லறை, உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டத் தோற்றம், கிறிஸ்தவத்தின் பிறப்பு ஆகிய அனைத்தும், ஒரே முடிவுரையைத்தான் கொடுக்கிறது: **இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்.**

# 9

# உங்கள் தீர்ப்பு என்ன?

## What is your Verdict?

ஆதி திருச்சபையின் மைய செய்தியே கிறிஸ்துவின் உயிர்தெழுதல் தான். மேலும் கிறிஸ்தவத்தின் முதுகெலும்பும் இந்த உயிர்தெழுதலே! இயேசு கிறிஸ்து தேவனுடைய தெய்வீகக் குமாரன் என்பதையும், அவருடைய வார்த்தைகள் அனைத்துமே தேவனுடைய வார்த்தை தான் என்பதையும் அவருடைய உயிர்தெழுதல் நிரூபிக்கின்றது. அவருக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்பதற்கு இதுவே அத்தாட்சி. மேலும் அவருக்கு, வாழ்வு மற்றும் சாவின்மீது அதிகாரம் உண்டு என்பதை இது விளக்குகின்றது. மேலும், அவரை பின்பற்றுபவர்களும் ஒரு நாளில் உயிர்தெழுவார்கள் என்பதற்கு அவருடைய உயிர்தெழுதல் முதற்செயலாக உள்ளது. இந்த செயல் நமக்கு, வாழ்வை முழுமையாக வாழ்வதற்கான வல்லமையையும், மரணத்திற்கு பின் உள்ள வாழ்விற்கான நம்பிக்கையையும் தருகின்றது.

கிறஸ்துவின் உயிர்தெழுதலை நம்புபவர்கள், கண்மூடித்தனமான விசுவாசத்தினால் செயல்படுபவர்கள் அல்ல. அவர்களுடைய நம்பிக்கையின் பலம் என்னவெனில் திடமான ஆதாரங்கள் மற்றும் கண்ணாரக் கண்ட சாட்சிகள். 1 கொரி 15:5-8ல் உள்ள ஒவ்வொரு சாட்சிகளும், ஒரு நீதிமன்றத்தின் சாட்சிக் கூண்டில் ஏறி நின்று, சுமார் 15 நிமிடங்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கண்கண்ட சாட்சியை கூறுவார்களானால், அந்த நீதிபதி சுமார் 128 மணி நேரம் அவர்கள் அனைவரின் சாட்சியை கேட்க நேரிடும். பழைய வரலாற்றில் மிகவும் அதிகாரப்பூர்வமான செயல், இந்த கிறிஸ்துவின் உயிர்தெழுதலே ஆகும்.

**மறுஆய்வு :**

இந்த புத்தகத்தில் நாம், ஒரு பெரிய பனிக்கட்டியைப் போன்ற ஆதாரங்களின் ஒரு துகல் அளவு மட்டும் பார்த்துள்ளோம். அப்போஸ்தலர்களிடமிருந்து கண்கண்ட சாட்சிகளையும், கண்கண்ட சாட்சிகளின் அடிப்படையில் லூக்கா கொடுத்த அறிக்கையையும் கண்டோம். யூத மற்றும் ரோம வரலாற்றாளர்களின் எழுத்துக்களையும் வாசித்து, முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சபை தலைவர்களின் சாட்சிகளையும் ஆராய்ந்தோம்.

மேலும் நாம், இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களில் 66 தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்தோம்; மேலும் தேர்ந்த அகழ்வராய்ச்சியாளர்களினால் கொடுக்கப்பட்ட நிலையான ஆதாரங்களையும் பார்த்தோம். பழமையான பிரதிகளை (Manuscripts) அதிகாரமுள்ளவைகள்

என உறுதிசெய்ய வரலாற்றாலர்கள் வைத்த எல்லா பரீட்சைகளிலும் புதிய ஏற்பாடு வெற்றி பெற்றுள்ளது. இயேசுவின் வாழ்வு, மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலைப் பற்றி குறிப்பிட்டுள்ள 39 பழமையான வேதாகமத்திற்கு வெளியில் உள்ள ஆதாரங்கள் (அதில் 17 கிறிஸ்தவம் சாராத பிரதிகள்) இருக்கின்றன என தெரிகிறது. புதிய ஏற்பாடு தான், மிக பழமையான அதிகாரமுள்ள ஆவணமாகும்.

புதிய ஏற்பாட்டின் வரலாற்றுத் தன்மை நிரூபிக்கப்பட்டுவிட்டதால், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய கூற்றுகளை இப்பொழுது சந்திக்கிறோம். இயேசுவே தன்னுடைய வார்த்தைகளில், "கிறிஸ்து யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்?" (மத் 22:42) என்று கேட்டுள்ளார்.

**தங்கள் விசுவாசத்திற்காக அப்போஸ்தலர்கள் மரித்தனர் :**

யோவானைத் தவிர மற்ற எல்லா அப்போஸ்தலர்களுமே கிறிஸ்துவுக்காக தங்கள் உயிரை கொடுத்தனர். இன்றும் தங்கள் மத நம்பிக்கைக்காக உயிரை விட ஆயத்தமாயிருக்கும் மத பக்தர்கள் உள்ளனர்; ஆனால் அவர்களுடைய நம்பிக்கையை உறுதி செய்ய முடியாது.

மாறாக அப்போஸ்தலர்கள், தங்கள் கைகளினால் தொட்டதும், கண்டதும், கேட்டதுமானதற்காக உயிரைக் கொடுத்தனர். தங்களுக்கு உண்மை என்று தெரிந்த ஒன்றிற்காக தங்கள் உயிரைக் கொடுக்க ஆயத்தமாயினர்.

**முரண்பாட்டாளர்கள் தங்கள் மனதை மாற்றிக்கொண்டனர் :**

ஆரம்பத்தில், இயேசுவின் சகோதரர்களே அவரை நம்பவில்லை (யோ 7:5). ஆனாலும் அவர்கள் மனம் மாறும்படியான நிகழ்வு ஏதோ நடந்தது. பவுல் கூறும்பொழுது, தன்னுடைய உயிர்தெலுதலுக்குபின் இயேசு, யாக்கோபிற்கு தரிசனமானார் என்றார் (1 கொரி 15:7). சில நாட்களுக்கு பின், மேல்வீட்டிலே ஜெபிக்கும்படி கூடின 120 விசுவாசிகளில் யாக்கோபும் இருந்தார் (அப் 1:14). மேலும், எருசேலம் சபையில் ஒரு பெலமான வழி நடத்துனராக யாக்கோபு மாறி (அப் 15), தன்னுடைய பெயரை உடைய ஒரு புதிய ஏற்பாட்டு புத்தகத்தை எழுதினார். ஜோசேபஸின் கூற்றுபடி, தன்னுடைய விசுவாசத்திற்காக யாக்கோபு கல் எறிந்து கொலை செய்யப்பட்டார். இயேசுவின் இன்னொரு சகோதரரான யூதா, புதிய ஏற்பாட்டின் மற்றொரு புத்தகமான யூதா புத்தகத்தை எழுதினார்.

தர்சு பட்டணத்தை சேர்ந்த சவுல், முதலில் இயேசுவை ஒரு ஏமாற்றுக்காரர் என எண்ணி, கிறிஸ்தவத்தை அழிப்பதற்கு என்னவெல்லாம் கூடுமோ அனைத்தையும் செய்தான். அவன் ஸ்தேவானை கல்லெறிந்தவர்களின் ஆடைகளை பாதுகாத்தது மட்டுமன்றி, ஸ்தேவானின் மரணத்திற்கு அங்கீகாரம் (சாட்சி) கொடுத்தான், (அப் 7:58;8:1). மேலும் சவுல், ஆண்டவருடைய சீடர்களை

கொலை செய்யும்படியான எச்சரிக்கைகளை விடுத்தான் (அப் 9 :1) ; அச்சமயம் அவன் தமஸ்குவுக்கு போகும் பாதையில், ஒரு பிரகாசமான ஒளியின் மத்தியில் இயேசு அவனுக்கு தரிசனமானார். அதன்பின்பு வெகுசீக்கிரத்திலேயே சவுல், யூத ஜெப ஆலயத்திற்குள் பிரவேசித்து, இயேசுதான் மேசியா என கூற ஆரம்பித்தான். தர்சு பட்டண சவுல், மிகச் சிறந்த அப்போஸ்தலன் பவுலாக மாறினான்.

அநேக காலங்களாக, எண்ணிலடங்கா நேர்மையான எதிர்ப்பாளர்கள் கிறிஸ்துவை மதிப்பற்றவராக காண்பிக்க முயற்சித்து, அவர்களுடைய ஆராய்ச்சியின் விளைவாக, தாங்களே அவரிடம் சேர்ந்துள்ளனர். ஒருவர் இந்த ஆதாரங்களை திறந்த மனதுடனும், நேர்மையான இதயத்துடனும் ஆராய்ச்சி செய்வார்களானால், இந்த சாட்சிகள் மிருகபலம் வாய்ந்தவை.

### ஒசுவரி பதிவுகள் (Ossuary Engravings) :

அநேக முதல் நூற்றாண்டு யூத சவப்பெட்டிகள், "ஒசுவரி" என்ற அழைக்கப்பட்டவைகளில், சிலுவை சின்னமோ அல்லது இயேசுவின் பெயரே பதியப்பட்டிருந்தன. கி.பி. 1873-ல் மரியாள் மற்றும் மார்த்தாள் ஆகியோரின் பெயர்களும், எலும்புகளும் அடங்கிய, ஒரு 'ஒசுவரி' சவப்பட்டி, பெத்தானியாவிற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு அருகில் லாசருவின் சவப்பெட்டியும் இருந்தது. இந்த ஒவ்வொரு பெட்டிகளின் மேலும் சிலுவைச் சின்னம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இவைகட்கு அருகில் இருந்த மற்ற சவப்பெட்டிகளில் (ossuaries) "மீட்பர் இயேசு" (Jesus the Redeemer) மற்றும் "ஆண்டவர் இயேசு' (Jesus the Lord) என்ற கிரேக்க பதிவுகள் இருந்தன.

மத்தியாவின் சவப்பெட்டியில் (அநேகமாக யூதாசிற்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டவன்) அப் 1:26, "இயேசுவே யெகோவா" என்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

சந்தேகிப்பாளர்களின் (எதிர்ப்பாளர்கள்) கூற்று என்னவெனில், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையின் மீதான நம்பிக்கை 4ம் நூற்றாண்டு கண்டுபிடிப்புதான் என்பதே! ஆனால் அநேக முதல் நூற்றாண்டு சவப்பெட்டிகளில் (ossuaries), இயேசு கிறிஸ்துவை தேவன் என்று உறுதி செய்யும் விசுவாச வரிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### நவீன அறிஞர்களின் சாட்சிகள் :

வெஸ்டர்ன் மிகிகன் பல்கலைக்கழகத்தின் 'பண்டைய வரலாறு' பாடத்தில், பேராசிரியரான டாக்டர் 'பவுல் ட. மேயர்' கூறியது, "எல்லா சாட்சிகளையும் (ஆதாரங்கள்) கவனமாகவும், நியாயமாகவும் மதிப்பிட்டால், இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறையானது வரலாற்று ஆய்வின் அளவுகோலின்படி உண்மையில் முதல் ஈஸ்டர் நாளன்று காலையில், காலியாக இருந்தது என்பது நியாயமானது தான். இந்தக் கூற்றை மறுக்கும் வகையில் இலக்கியங்களிலோ,

புதைபொருள் ஆராய்ச்சியிலே எந்த ஆதாரமும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

புருக்ஸ் பாஸ் வெஸ்காட் (Brooks Foss Wescott) எனும் ஆங்கில எழுத்து விமர்சகர் கூறியது என்னவெனில், "எல்லா ஆதாரங்களை ஒருமித்து எடுத்துக் கொண்டால், கிறிஸ்துவின் உயிர்தெழுதலை உறுதி செய்வதைப் போல வேறு எந்த வரலாற்று நிகழ்வும் உறுதி செய்யப்படவில்லை" என்றார்.

ஜான் சிங்கிள்டன் கோப்ளி (John Singleton Copley) என்பவர், இவர் பிரிட்டிஷ் வரலாற்றிலேயே சிறந்த சட்ட நிபுணர் என்று பரவலாக அறியப்பட்டவர். எழுதியது, "ஆதாரம் என்றால் என்ன என்று எனக்கு நன்றாகத் தெரியும்; மேலும் நான் உங்களுக்கு கூறுகிறேன், உயிர்தெழுதலை உறுதி செய்யும் எந்த ஆதாரமும் இதுவரை உடைக்கப்படவேயில்லை."

லார்ட் டார்லிங் (Lord Darling) என்ற இங்கிலாந்தின் உச்ச நீதிபதி ஒரு முறை கூறியது என்னவெனில், "எந்த ஒரு புத்திசாலியான நீதிபதியாலும் உயிர்தெழுதல் நிகழ்ச்சி பொய்யானது என ஒரு தீர்ப்பை கொடுக்க முடியாது" என்றார்.

இப்படி மிக ஞானமுள்ள மனிதர்களின் சாட்சிகள் இன்னும் அநேகம் உண்டு. இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலின் மீது நம்பிக்கை என்பது அறியாமையின் அடையாளம் அல்ல. உலகின் சில அறிவில் தேர்ந்த மூளைகள் (மனிதர்கள்), இதன் சாட்சிகளை (ஆதாரங்களை) ஆராய்ந்து, விசுவாசத்திற்கு வந்துள்ளனர்.

**நம்முடைய பதிற்செயல்**

புதிய ஏற்பாடும், அநேக வரலாற்று பதிவுகளும் நமக்கு, இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என நம்பத்தகுந்த காரணங்களைக் கொடுக்கின்றன. இப்பொழுது கேள்வி என்னவெனில், இந்த கிறிஸ்துவை வைத்து நாம் என்ன செய்வது? "அவருடைய (தேவன்) சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்." (யோ 7:17) என்று இயேசு கூறினார். இங்கே ஒரு யதார்த்தமான சோதனை. நாம் உண்மையிலேயே நம்ப விரும்புவோமானால் இயேசுவைப் பற்றிய உண்மைகளை தெரிந்து கொள்வோம். நாம் நம்ப மனதில்லாதவர்களானால் எவ்வளவு ஆதாரங்களை கொடுத்தாலும் அது நம்மை திருப்பதிப்படுத்தாது.

தன்னை தேவன் என்று நிரூபிக்கும்படி இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தது உண்டானால், இன்று அவர் உயிரோடு இருக்கிறார். நம்முடைய ஆராதனைக்கு அவர் பாத்திரராயிருக்கிறார்; மேலும் அவர் தன்னுடன் ஐக்கியம் வைத்துக்கொள்ள நம்மை அழைத்துள்ளார். "இதோ, வாசற்படியிலே நின்று

தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி 3:20) என்று இயேசு கூறினார்.

இயேசு தேவனுடைய குமாரனானால், நாம் அவரை தாழ்மையுடன் அனுக வேண்டும்; முரட்டுத்தனம் மற்றும் அதிகார தோரணையில் அல்ல. நாம், அவர் சொல்வதைக் கேட்கும் எண்ணத்துடன் அவரிடம் வரவேண்டுமே தவிர, நாம் விரும்புவதை செய்யும்படி அல்ல.

இயேசுவே இந்த வார்த்தைகளை கூறியுள்ளார். "...நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோ 8 :24).

"...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். ....ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்" (யோ 3:3,5) என்று இயேசு கூறினார்.

இங்கே இயேசு கூறியதின் அர்த்தம் என்ன? தண்ணீரில் ஞானஸ்நானத்தை (மூழ்குதல்) உள்ளடக்கிய ஒரு ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி கூறினார். முதல் இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்த சபையின் முன்னோடிகள், யோ 3:3-5க்கு விளக்கமளிக்கும்போது, கிறிஸ்து இங்கே கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைப் பற்றியே பேசுகிறார் என்றனர்.

ஒரு மனிதன் விசுவாசத்தோடே கிறிஸ்துவிடம் வந்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று தண்ணீரிலே திருமுழுக்கு பெறும்போது, அந்த நபர் தேவனிடம் இருந்து பரிசாக பரிசுத்த ஆவியை பெறுகின்றார். இந்த பரிசுத்த ஆவியானவர் புதிய கிறிஸ்தவருக்குள் சென்று, அவரை கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகின்றார் (2 கொரி 3:18).

பெந்தேகொஸ்தே நாளில், கூடியிருந்த மக்களிடம் பேதுரு கூறியது, "ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன், ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று.... இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; 'சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்"? (அப் 2:36-37) பேதுரு கூறிய பதில், " ... நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வார்த்தை பெறுவீர்கள்" (அப் 2:38). கிட்டதட்ட 3000 பேர் அன்றைய தினம் திருமுழுக்குப் (ஞானஸ்நானம்) பெற்று, எருசலேமில் சபை ஸ்தாபிதமானது. தேவனுடைய ராஜ்ஜியத்திற்கான வாசற்கதவு புதிய பிறப்பே.

இயேசு சொல்கிறார், "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்11:28-30)

**ஒரு தனிப்பட்ட அனுபவம் :**

உலகெங்கும் உள்ள மக்கள், உயிர்தெழுந்து கிறிஸ்துவுடன் ஒரு அனுபவத்தை பெற்றுள்ளனர்; மேலும் அவர்கள் உங்களுக்கு, தங்கள் வாழ்வு எவ்வாறு மேம்பட்டுள்ளது என கூறுவார்கள். இவ்வாறான கிறிஸ்துவுடனான தனிப்பட்ட அனுபவங்கள் தான், இறுதியான மற்றும் மிக முக்கியமான ஆதாரங்களை தருகின்றன.

இயேசுவை கிறிஸ்து என்றும், தேவ குமாரன் என்றும் நீங்கள் திருப்தியடைந்திருந்தால் உங்கள் விசுவாசத்தைப் பற்றி மறுபடியும் சிந்தித்து, கிறிஸ்துவின் அழைப்பிற்கு ஏன் செவிகொடுக்கக் கூடாது?

மூழ்கி எடுக்கும் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) என்பது இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலின் அடையாளமாக உள்ளது. ஞானஸ்நானத்திலே, நாமும் அவருடைய மரணத்தைப்போலவே அவரோடு கூட இணைகிறோம்; அதேபோல் அவருடைய உயிர்தெழுதலைப் போலவே அவரோடு கூட இணைகிறோம் (ரோ 6:3-6; கொலே 2:12). அதினால் பழைய பாவமென்னும் சுயம் மரித்து, சுத்திகரிக்கப்பட்ட சுயம் "புது வாழ்விற்காக" உயிரோடு எழுகின்றது.

நம்முடைய பாவங்களை நீக்கும்படி இயேசு சிலுவையிலே மரித்தபடியினாலே, அவர் நமக்கு மன்னிப்பை அருளுகிறார். அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். அவரோடு கூட ஒரு உண்மையான உறவு நாம் வைத்துக்கொள்ள விரும்புகிறார்.

**மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் :**

இதன்பின், நம்முடைய உறவு கிறிஸ்துவுடன் மட்டும் அல்ல; மற்ற கிறிஸ்தவர்களுடனும் உண்டு. நாம் பாவத்தினால் உடைந்துபோன உலகிலே வாழ்கிறோம் என்றும், மன்னிப்பைப் பெற்று பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பெற்று தேவனுடைய சொந்த ஜனமாக பிரிக்கப்பட்டவர்களுடன் நமக்கு ஐக்கியமிருந்தால் மட்டுமே நாம் பெலன் பெற இயலும் என்றும் தேவனுக்கு தெரியும். இந்த ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளின் ஐக்கியம், ஒரு மிகப்பெரிய உலகமுழுவதுமான ஆவிக்குரிய குடும்பம். வேதாகமத்திலே இதனை, "தேவனுடைய குடும்பம்", "தேவனுடைய ராஜ்யம்", "கிறிஸ்துவின் மணவாட்டி" மற்றும் "சபை" என்று எல்லாம் அழைக்கப்படுகின்றது.

உலகளாவிய (Universal) கிறிஸ்துவின் சபையானது உலக முழுக்க பட்டணங்கள், கிராமங்கள் மற்றும் நகரங்களில் ஆகிய எல்லா இடங்களிலும் உள்ள பிராந்திய சபைகளின் கூட்டமாகும். அவைகள் ஒட்டுமொத்தமாக "கிறிஸ்துவின் சபையார்" (ரோ 16:16) என்று அழைக்கப்படுகின்றது.

நீங்கள் ஒன்றை நினைத்து குழம்ப வேண்டாம். "கிறிஸ்துவின் சபையார்" என்பது, இன்று உலகில் உள்ள முரண்பாடான போதனைகள் மற்றும் நடைமுறைகளை உடைய எல்லா நாமகர்ண சபைகளையும் உள்ளடக்காது. கிறிஸ்துவின் காலத்திற்கு பின் அநேக ஆண்டுகள் கழித்து, இந்த நாமகர்ணக்கூட்ட சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன; மேலும் அவை புதிய ஏற்பாட்டு காலத்தில் இல்லாமல் இருந்தது.

எந்த "பரலோக ராஜ்யம்" "சமீபமாயிருக்கிறது" என்று இயேசு கூறினாரோ (மத் 4:17), அதைத்தான் புதிய ஏற்பாட்டிலே நாம் சபை என்று வாசிக்கிறோம். தான் கட்டுவேன் என்று இயேசு கூறிய "சபையும்" இதுவே (மத் 16:18). பெந்தேகொஸ்தே நாளில் பேதுருவினால் திறந்துவிடப்பட்ட "பரலோக ராஜ்யமும்" இதுவே (மத் 16:19). ஆரம்பம் முதல் நாளிலேயே இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் சேர்த்ததும் அந்த சபையிலேயே (அப் 2:47).

'அப்போஸ்தலர் உபதேசம், ஐக்கியம், அப்பம் பிட்குதல் மற்றும் ஜெபம் செய்தல்' ஆகியவற்றிற்கு தங்களை அர்ப்பணித்திருந்த மக்களால் ஆனதே புதிய ஏற்பாட்டின் சபை (அப் 2:42). 'மனிதனுடைய கற்பனைகளை உபதேசங்களாக போதிப்பதற்கு' பதிலாக, சபை முன்னோடிகள் புதிய ஏற்பாட்டின் காலத்தில், 'அருளப்பட்ட தேவனுடைய வசனத்தை' போதித்தனர் (2 தீமோ 3:16,17). அவர்கள், பிரிந்திருக்கக் கூடாது என உற்சாகப்படுத்தப்பட்டு, ஒருவருடன் ஒருவர் இசைத்து, "ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தி" இருக்கும்படி கூறப்பட்டனர் (1 கொரி 1:10). அதுவே இன்றைக்கு நமக்கான தேவ சித்தம்.

சுருக்கமாக, நாம் இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவும், மற்ற உடன் விசுவாசிகளுடன் ஐக்கியமும் வைக்க அழைக்கப்பட்டுள்ளோம். இந்த ஐக்கியத்தல் நாம், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்" அனுபவிப்போம் (2 கொரி 13:14). இந்த ஐக்கியத்தில் நாம் சிறந்த மனிதர்களாக மாற்றப்படுகிறோம்.

இதை நீங்கள் நம்புகிறீர்களா? நீங்களே நீதிபதி ! உங்கள் தீர்ப்பு என்ன ?

**குறிப்பு :** இப்புத்தகத்தைப் பாடமாக படிக்க விரும்புபவர்கள், கேள்விதாள் புத்தகத்தை கேட்டு, எழுதி பெற்றுக்கொள்ளவும்.